Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-709)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 01 (04.04.2003) வெள்ளிக்கிழமை இதழ் :183

# 700 போராளிகள் பயிற்சி முடித்து வெளிவந்தனர்


தேசியக் கொடியேற்றும் மூத்த தளபதி கேணல் கருணா.


அணிவகுப்பை பார்வையிடும் கேணல் கருணா, தளபதி ரமேஷ், மகளிர் படையணித் தளபதி நிலாவினியுடன் ஏனைய தளபதிகளும்.


பயிற்சி முடித்து வெளியேறிய போராளிகளின் அணிவகுப்பு.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் 55 ஆவது பாசறையில் இருந்து நேற்று 700 போராளிகள் பயிற்சியை முடித்து வெளிவந்த நிகழ்வு, தரவை மத்திய பயிற்சிப் பாசறையில் நடைபெற்றது.

பயிற்சியை முடித்து வெளியேறிய இவர்களில் ஆண் போராளிகள் 400 பேரும், பெண் போராளிகள் 300 பேரும் அடங்குவர்.

# ஐரிஷ் நோபல் பரிசாளர் புலிகளை சந்தித்து பேச்சு

## வட அயர்லாந்து அனுபவங்கள் பற்றி விபரிப்பு

(கிளிநொச்சி)

**வட அயர்லாந்து சமாதான முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டமைக்காக சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவரான, அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஜோன் ஹியூம், நேற்று கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சு நடாத்தினார். இச்சந்திப்பின்போது, வட அயர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் குறித்து ஹியூம், புலிகள் தரப்புக்கு விபரித்தார்.**

நேற்றுக் காலை 10.30 மணியளவில் உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்தை வந்தடைந்த ஜோன் ஹியூம் தலைமையிலான குழுவினரை, தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

பின்னர், தமிழீழ காவல் துறையினரின் மரியாதையுடன் மேற்படி குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

நேற்றுக் காலை 11 மணியிலிருந்து 12 மணிவரை இடம்பெற்ற இச்சந்திப்பில், சமாதானத்துக்கான நோபல் பரிசினைப்பெற்ற அயர்லாந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)


ஜோன் ஹியூமை கைலாகு கொடுத்து வரவேற்கிறார் தமிழ்ச்செல்வன்.

# உடன்பட்ட விடயங்களினை அமுல்செய்தாலே சமாதானம்

## கிளிநொச்சி சந்திப்பின் பின் தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதனைச் செயற்படுத்துவதன் மூலம், மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி, சமாதானத்திற்கும் அமைதி முயற்சிக்குமான ஒத்துழைப்புக்களை நாம் பெற்றுக்கொள்ளலாம் என, சமாதானத்திற்கான நோபல் பரிசுபெற்ற ஜோன் ஹியூமிடம் எடுத்துக்கூறியதாக - அவரைச் சந்தித்த பின்னர், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்றைய சந்திப்பில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற சமாதானச் சூழ்நிலை தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினோம். அத்துடன், தற்போதுள்ள களச் சூழ்நிலை தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராய்ந்தோம் எனவும் கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)


ஐரிஷ் நோபல் பரிசாளர் மற்றும் குழுவினருடன் புலிகளின் சந்திப்பு.

# சமாதானம் குறித்த புலிகள் நிலை வரவேற்கக் கூடியதாகும்-ஹியூம்

(யாழ்ப்பாணம்)

வன்முறைகளை முற்றாகத் தவிர்த்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிம்மதியான சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு உறுதியான போக்கை அனைத்துத் தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டுமென, சமாதானத்திற்கான நோபல் பரிசினைப் பெற்ற ஜோன் ஹியூம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நான் இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் இங்கு வந்துள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணாணம் விநாசியர்


சோழியன் குடுமி சும்மா ஆடாது கண்டியளோ....!

# அமெரிக்க விமானப்படை குழு இலங்கைக்கு வந்துள்ளது!

## கட்டுநாயக்க, சீனன்குடா தளங்களுக்கு விஜயம்

அமெரிக்காவின் விமானப்படை உயரதிகாரிகள் கொண்ட குழு நேற்று இலங்கை வந்துள்ளது. நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கும் இக்குழுவுக்கு, ஜெனரல் வில்லியம் கே வெசாக் தலைமை தாங்குகிறார்.

இவர் பசுபிக் பிராந்திய விமானப்படைத் தலைவராவார். இவர்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும், விமானப்படைத் தளபதியையும் இன்று உத்தியோகபூர்வமாகச் சந்திப்பார்கள்.

ஜெனரல் வெசாக் - கட்டுநாயக்க, சீனன்குடா ஆகியவற்றில் உள்ள இலங்கை விமானப்படைத் தளங்களுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

ஈராக் போர் நடைபெற்றுவரும் இவ்வேளையில், இக்குழுவினர் இலங்கை வந்துள்ளமை முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128
(சி-730)

## ஓவியக் கண்காட்சி - 2003

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சு ஓவியக் கண்காட்சி ஒன்றை எதிர்வரும் மே மாதப் பிற்பகுதியில் நடாத்தத் தீர்மானித்துள்ளது. இதற்காக மாணவர்களிடம் இருந்தும், இத்துறைசார் கலைஞர்களிடமிருந்தும் ஓவியங்கள் கோரப்படுகின்றன. விரும்பிய அளவு பிரமாணத்தில் காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டதான ஓவியங்களை நாம் வரவேற்கின்றோம். நவீனம் சார்ந்ததாகவோ, மரபு சார்ந்ததாகவோ இவை அமையலாம். இவை யாவற்றையும் கருத்தில் கொண்டு ஓவியங்களை மே மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாக

உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
கல்வி அமைச்சு,
திருகோணமலை.

என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

(சி/752)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஹயஸ் (Stiavee - ருக்மணி) வான் விற்பனைக்கு உண்டு.

விடுமுறை நாட்கள் தவிர மற்றைய நாட்களில் காலை 9 - மாலை 5 மணிவரை பார்வையிடலாம்.

தொடர்பு:- கோறல் டெஸ்டிபூட் இண்டஸ்ரீஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (சி-745)

### மலிவு விற்பனை

10″, 12″, 14″, 16″ சைனா மெஷின்கள் (China Machine) வெல்டிங் பிளான்ட், றில்லர்கள், ஜெனரேட்டர்கள் ஏனைய எலெக்ரிக் சாமான்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- கி.சுதாகரன், இல.20, 2 ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சி-750)

## DIALOG. G.S.M. இன் யாழ். முகவர்.




### DIALLINKS PHONE SHOP

இன் புதுவருடத்திற்கான (சுபிறு) விசேட சலுகை

எம்மிடம் புதிய கையடக்கத் தொலைபேசியை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு 04.04.2003 இல் இருந்து 04.05.2003 ஆம் திகதி வரையும்.




ஒரு Alcatel Phone இற்கு 1000/- KIT CARD இலவசம்.

| Alcatel - 10950/- | Sagem - 7450/- |
|---|---|

DIALOG. G.S.M. இன் I.D.D. விலைக்குறைப்பு. KIT CARD (மீள் நிரப்பு அட்டை) பாவிக்கும் கையடக்கத் தொலைபேசி உள்ள வாடிக்கையாளர்கள் இரவோ பகலோ. எந்த நேரமும் வெளிநாட்டிற்கான (I.D.D) தொடர்பை குறைந்த கட்டணத்தில் ஏற்படுத்தலாம்.

**1 நிமிடம் 25/- செக்கனுக்கும் கணக்கிடப்படும்.**

எம்மிடமும், எமது முகவரிடமும் வாங்கும் KIT CARD க்கு மட்டும் உள்வரும் அழைப்புக்கு 1 நிமிடம் இலவசம்.

உ+ம்:-
கனடா, சுவிஸ், ஜேர்மன், அமெரிக்கா, லண்டன், டென்மார்க், பிரான்ஸ், நோர்வே, அவுஸ்திரேலியா.

**No.204,
Diallinks, The Phone Shop,
K.K.S Road,
Jaffna.**

தொ.இல:- 222 5485

(சி/749)

## வாழ்க வளமுடன்

### HAPPY BIRTHDAY

### ஐந்தாவது அகவையில்



பெயர் : ஜெ.நிதுஜா
முகவரி: கரணவாய் வடக்கு, கரவெட்டி.

பெயர் :ச.கௌசிகா
முகவரி: இல.19,சிவன் வீதி நல்லூர்.



### எட்டாவது அகவையில்



பெயர் : இ.ஆதவன்
முகவரி: சிறுகுடில், கரவெட்டி மத்தி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## மலிவு விற்பனை

20% முதல் 50% வரை

புதுக்கணக்குப் போடவிருப்பதால்

பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது. ஒருமுறை விஜயம் செய்யுங்கள். (சி-753)

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Best Bank in Srilanka

Institute of Informatics Studies

இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

பூபாலசிங்கம் புத்தகசாலை

Elephant house Necto

அனுசரணையில்

## நமது ஈழநாடு நடாத்தும்

### க.பொ.த (உயர்தரம்) 2003

வர்த்தகப் பிரிவுக்கான
மாபெரும் இலவச முன்னோடிக் கருத்தரங்கு

ஆசிரியர் குழாம்
வணிகக் கல்வி:- திரு. B.பசில் கணக்கீடு:- திரு. D.Sam
பொருளியல்:- திரு.இராஜேஸ்வரன்

காலம்:- 11.04.2003
நேரம்:- காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை
இடம்:- யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி.


## நினைந்துருகல்

| 8 ஆம் ஆண்டு | 3 ஆம் ஆண்டு |
|---|---|





புலர்வு:- 19-06-1924
உதிர்வு:-06-05-1995
அமரர்
**அழகரத்தினம் ஜெகநாதன்**
*(ஓய்வுபெற்ற பொறியியலாளர், எயர் சிலோன், எயர்லங்கா)*

புலர்வு:- 04-03-1925
உதிர்வு:-04- 04-2000
அமரர்
**பத்மாவதி ஜெகநாதன்**
*(பேபி அக்கா - ஓய்வுபெற்ற ஆசிரியை)*

இன்று மட்டுமல்ல - இன்னும்
எத்தனை ஆண்டு யுகங்களானாலும்
உங்கள் நினைவு - எம்
நெஞ்ச நிலத்தில் வற்றாத ஊற்றுக்களாய்
ஊறிக்கொண்டேயிருக்கும்.

அ.விக்கினேஸ்வரன்,
46, வைமன் வீதி,
யாழ்ப்பாணம். (சி-751)

சகோதர, சகோதரிகள், பெறாமக்கள்.
மருமக்கள், மச்சான், மச்சாள்மார்,
பேரப்பிள்ளைகள், உற்றார், நண்பர்கள்.

# இந்தியாவில் புலிகளை ஆதரித்துப் பேசுவது பொடா சட்டத்தின் கீழ் தவறானதல்ல!

## மத்திய அரசு உயர் நீதிமன்றத்துக்கு அறிக்கை

இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசுவது, 'பொடா' சட்டத்தின்கீழ் தவறானதல்ல என்று இந்திய மத்திய அரசு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

முன்னதாக - ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ - உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவுக்கு விளக்கமளிக்குமாறு உயர்நீதிமன்றம் மத்திய அரசாங்கத்தைக் கோரியிருந்தது.

இதற்கு- முதலில் மத்திய அரசாங்கத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கத்தில், புலிகளை ஆதரித்துப் பேசுவது தவறு என்று குறிப்பிடப்பட்டிருந்தது. மத்திய அரசின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இந்த அறிக்கையை அடுத்து பாரதீய ஜனதாக் கூட்டணிக்குள் நெருக்கடி ஏற்பட்டிருந்தது.

தி.மு.க, ம.தி.மு.க உள்ளிட்ட சில கட்சிகள், கூட்டணியில் இருந்து விலகப்போவதாக நெருக்கடி கொடுத்ததையடுத்து, மத்திய அரசாங்கம் உயர்நீதிமன்றத்துக்கு இரண்டாவது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கை, முதலாவது அறிக்கைக்கு முற்றிலும் எதிர்மாறானதாக அமைந்துள்ளது.

உயர்நீதிமன்றத்துக்கு மத்திய அரசு தாக்கல் செய்த அறிக்கையில்- புலிகளை ஆதரித்து இந்தியாவில் பேசுவது பொடா சட்டத்தின்கீழ் தவறல்லவென்று இந்திய அரசின் சட்டமா அதிபர் சோலி சொராப்ஜி இரண்டு மாதங்களுக்கு முன்னரே அரசாங்கத்துக்குத் தெளிவுபடுத்தியிருந்ததாகவும்- ஆனால், அவருக்குக் கீழ் இயங்கும் சட்டத்தரணிகளின் தவறினால்தான் வைகோ மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



புலிகளை ஆதரித்துப் பேசியதாக வைகோவைப் பொடா சட்டத்தின் கீழ்க் கைது செய்தது தவறு என்றும், இலங்கைத் தமிழருக்காகப் போராடும் புலிகளை ம.தி.மு.க. ஆதரிப்பதாகவும் - ஆனால், இந்தியாவில் புலிகளின் செயற்பாட்டைத் தாம் ஆதரிக்கவில்லை என்றும், மத்திய அமைச்சர் கண்ணப்பன் - வைகோவின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## அடையாள அட்டை இல்லாதோருக்கு

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து தற்போது மீளக் குடியமர்ந்த, வலி.வடக்குப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள்- தங்கள் பிரிவு கிராமசேவை அலுவலர்களைச் சந்தித்துத் தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு உதவிப் பிரதேசசெயலர் கேட்டுள்ளார். (22)

## எல்லைகளை இணங்காணும் கண்காணிப்புக்குழு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் - சிறிலங்காப் படைத்தரப்பினருக்கும் இடையிலான கட்டுப்பாட்டுப் பகுதிகளின் எல்லைகளை இணங்காணும் பணியில் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளதாகக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரொகில்சன் காலிமாவட்டச் செயலகத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டுள்ளார். (10)

# இறந்த சீன மாலுமிகளுக்கு அரசு நஷ்டஈடு வழங்கும்!

## வெளிவிவகார அமைச்சர் உறுதி

முல்லைத்தீவுக்கு வடக்கேயுள்ள சுண்டிக்குளம் கடற்பகுதியில் மூழ்கடிக்கப்பட்ட சீன மீன்பிடி ட்ரோலரிலிருந்து - உயிரிழந்த மாலுமிகளுக்கு இலங்கை அரசாங்கம் நஷ்டஈடு வழங்குவது குறித்து, சீனாவுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளது.

இந்தப் பேச்சுக்களில் சீனாவின் பியூஜியன் மாகாண மீன்பிடித்துறை உயரதிகாரிகள் குழுவும், வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோவும் கலந்துகொண்டனர். உயிரிழந்த மாலுமிகளுக்கு நஷ்டஈடு வழங்கத் தாம் தயார் என்று தெரிவித்த வெளிவிவகார அமைச்சர், அடுத்த கட்டமாக நஷ்டஈட்டுத் தொகை பற்றி சீனத்தூதரக அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதென்றும் இணக்கம் காணப்பட்டது.

## சட்டவிரோத மண் அகழ்வு அதிகரிப்பு!

(சரசாலை)

தென்மராட்சியில் அண்மைக் காலமாக சட்டவிரோத அகழ்வுகள் அதிகரித்து வருகின்றன.

வேம்பிராய், கச்சாய், கோயிலாக் கண்டி கடற்கரை பிரதேசங்களில் சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரங்கள் லொறிகள் மூலம் மண் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இப்பகுதி மக்கள் கவலையும் விசனமும் தெரிவித்துள்ளதோடு, சம்பந்தப்பட்டோர் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

### இலங்கையிலுள்ள முஸ்லிம்கள்

# நடுநிலைச் சமுதாயமாக வாழப் பழகவேண்டும்

## பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத்

(மட்டக்களப்பு)

பல இனங்கள் வாழும் இந்த நாட்டில், சிறுபான்மையினரான முஸ்லிம்கள் நடுநிலைச் சமுதாயமாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும் என்று பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய அவர், அங்கு மேலும் தெரிவித்ததாவது,

பல இனங்கள் வாழும் இந்த நாட்டில் நடுநிலைச் சமுதாயமாக முஸ்லிம்கள் வாழ்வதன்மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் மூன்றாவது தரப்பாக இருக்கக்கூடிய நிலையை ஏற்படுத்த முடியும். இத்தகைய தொருநிலை முஸ்லிம்களுக்கு உயர்ந்தபட்ச அந்தஸ்தை ஏற்படுத்தும்.

பன்னிரெண்டு வருடங்களின் பின்னர், கிழக்கில் முஸ்லிம்கள் தமது சொந்தக் காணிகளில் விவசாயம் செய்யக்கூடியநிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையைக் கட்டிவளர்க்க முயலவேண்டும் என்றும் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

# இரு சிறிய விமானங்கள்; பதுங்குகுழியிலிருந்து மீட்பு!

## வாதுவவில் சம்பவம்

(கொழும்பு)

வாதுவவில், நிலத்துக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு சிறிய விமானங்களைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கண்டுபிடித்தனர்.

இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில், கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலிஸ் குழு, வாதுவ பொலிஸாரின் உதவியுடன் நடத்திய தேடுதலிலேயே இந்தச் சிறிய விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

நிலத்துக்கீழே கொங்றீட்டினால் அமைக்கப்பட்டிருந்த பதுங்குகுழி ஒன்றினுள் இந்த இரண்டு சிறிய விமானங்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக வாதுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் அபேசேகர தெரிவித்தார்.

விமானங்களைக் கண்டுபிடித்த பொலிஸார், அப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தினர். நீதிமன்ற அனுமதி பெற்ற பின்னரே, விமானங்களைக் கைப்பற்றவுள்ளதாக வாதுவப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

### மூளாய்ப் பகுதியில்

# சிறுவர்பாதுகாப்பு நிறுவனத்தின் உதவியுடன் வீட்டுத்திட்டம்!

(அராலி)

சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் மூளாயிலுள்ள சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனம் தற்காலிக வீட்டுத்திட்டமொன்றைச் செயற்படுத்தி வழங்கியுள்ளது.

சங்காணைப் பிரதேச செயலர் பிரிவில், வன்னியிலிருந்து மீளக் குடியமர்ந்தவர்களில் தெரிவுசெய்யப்பட்ட 50 பயனாளிகளுக்கே, 20 ஆயிரம் ரூபா செலவில் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு, வழங்கப்பட்டிருப்பதாக நிறுவனத்தின் வீட்டுத்திட்ட இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (118)

# வாள்வெட்டில் காயமுற்றவர் யாழ். வைத்தியசாலையில்!

பளைப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில், ஒருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை பளைப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில், அதேயிடத்தை சேர்ந்த சின்னவி அருந்தவராஜா (வயது 41) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உறவினரிடையே நெடுங்காலமாக நிலவிவந்த நீண்ட பகையே இதற்கான காரணம் என்று தெரிய வருகிறது. (சு,ரா)

### மகனை மீட்டுத்தருமாறு

# மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் தாயார் முறைப்பாடு செய்தார்!

(யாழ்ப்பாணம்)

கசிப்பு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிறைவைக்கப்பட்டுள்ள தனது 14 வயதுடைய மகனை மீட்டுத்தரும்படி, மனித உரிமை ஆணைக்குழு அதிகாரியிடம் தாயார் முறையிட்டுள்ளார்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன், பருத்தித்துறையில் வசிக்கும் மேற்படி சிறுவன் மாலைவேளையில் விளையாடிவிட்டு பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த பிளாஸ்ரிக் சோடாப் போத்தலில் இருந்த கசிப்பை தண்ணீரென எடுத்துப் பார்த்த வேளை, அவ்விடத்திற்கு வந்த பொலிஸார் பிடித்துள்ளனர்.

பின்னர் - நீதிமன்றில் ஆஜர் படுத்திய பொலிஸார், சிறுவனைச் சிறையிலடைத்துள்ளனர். இதுவரை சிறுவன் விடுவிக்கப்படவில்லை என தாயார், மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.(ரா)

# வட - கிழக்கு உள்ளூராட்சி சபைகள்; விபரம்கோரும் தேர்தல் திணைக்களம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள, உள்ளூராட்சி சபைகளின் முழுமையான தரவுகளை அனுப்பி வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் வட-கிழக்கு மாகாணத்திலுள்ள உதவித் தேர்தல் ஆணையாளர்களைப் பணித்துள்ளார்.

நாளை 5 ஆம் திகதிக்குள் இந்த உத்தியோகபூர்வ அறிக்கைகளைத் தமக்குச் சமர்ப்பிக்குமாறும் உதவித் தேர்தல் ஆணையாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

வட - கிழக்குப் பகுதிகளில் உள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் உள்ளூராட்சி சபைகள், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள பிரதேசசபைகள், இருதரப்பினரதும் கட்டுப்பாடுகளிலுள்ள பிரதேச சபைகள் பற்றிய விபரங்களைத் தனித்தனியாகப் பட்டியலிட்டுத் தருமாறு தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார்.

வட மாகாணத்தில் 28 உள்ளூராட்சி சபைகளும், கிழக்கு மாகாணத்தில் 39 உள்ளூராட்சி சபைகளும் உள்ளன. இவற்றுள் வவுனியா மாவட்டத்திலுள்ள 3 உள்ளூராட்சி சபைகளும், மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தலா நான்கு பிரதேச சபைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் அனைத்து பிரதேசசபைகளும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

வட - கிழக்கு உள்ளூராட்சி சபைகளுக்குக் கோரப்பட்டிருந்த வேட்பு மனுக்களை, அமைச்சரவை ரத்துச் செய்ததையடுத்து தேர்தல் திணைக்களம் புதிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

# கொள்கை முரண்பாடு இருப்பினும் ஜே.வி.பியுடன் கூட்டணி அமையும்

## ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும், பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் இடையிலான கூட்டணியை அமைப்பது குறித்த பேச்சுக்கள் முன்னேற்றகரமான பாதையில் சென்றுகொண்டிருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகாவின் ஊடகப் பேச்சாளர் ஹரிம் பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர், மேலும் தெரிவிக்கையில் -

ஜே.வி.பியுடனான கூட்டணி தொடர்பில் - கொள்கைகளில் சில முரண்பாடுகள், பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு, கூட்டணி பற்றிய இணக்கப்பாட்டை எட்டுவதற்குச் சிறிதுகாலம் சென்றாலும், கூட்டணி அமைக்கப்படுவது உறுதி என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கலை பண்பாட்டுக்கழக ஏற்பாட்டில் திருகோணமலையில் முத்தமிழ்விழா!

## ஐந்து நாட்கள் நடைபெறும்

(திருகோணமலை)

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இசை, நடன நாடக விழா எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் 12 ஆம் திகதிவரை தினமும் பிற்பகல் 4.00 மணிக்குத் திருகோணமலை உவர் மலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஈழத்தின் பாரம்பரியக் கலைகள், பண்பாடு ஆகியவற்றை நவீன அரங்க நியமங்களுடன் இணைந்து சிறப்பாக அளிக்கை செய்யப்படவுள்ளன. கலைப் பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாக - தமிழகத்துக் கலைஞர்களின் சிறப்பு நிகழ்ச்சிகள், சிங்களப் பாரம்பரிய நவீன அரங்க அளிக்கைகள், ஈழத்தில் புகழ் பெற்ற கலைஞர்களின் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள், சிறப்புரைகள், கருத்துரைகள் என்பன இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், வன்னி, மலையகம், மட்டக்களப்பு, தென்னிலங்கை ஆகிய பகுதிகளிலிருந்தும் வருகை தரவுள்ள கலைஞர்கள், பேராளர்கள் தங்குவதற்குரிய அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஈழத்தில் எழுத்தாளர்கள், கலைஞர்களின் சங்கமிப்பாக நிகழ்ந்த மானிடத்தில் தமிழ்க் கூடல் நிகழ்ச்சியில் இரண்டாம் கட்ட நிகழ்வாக நடைபெறவுள்ள இசை, நடன, நாடக விழாவில், முக்கிய நிகழ்ச்சிகளாகப் பின்வருவன மேடையேற்றப்படவுள்ளன.

வாத்திய இசை நிகழ்ச்சிகளாக- ஈழத்தின் தலை சிறந்த நாதஸ்வர மேதைகளின் நாதஸ்வரம், இசை ஞான திலகம் மு.இராதாகிருஷ்ணனின் வயலினிசை, மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடன கல்லூரி மாணவர்களின் 'வாத்யப் பிருந்தா' என்பனவும் -

வாய்ப்பாட்டு இசை நிகழ்ச்சிகளில் - சாகித்திய இசைப் பேரரசு எம்.வி.என்.நவரட்ணம், இசைக்கலைமணி திருமதி பிரியதர்சினி ஜெகதீஸ்வரன், சங்கீத ரத்னம் ஞானகுமாரி சிவநேசன், ஹம்சத்வனி பாஸ்கரன், சங்கீதபூஷணம் பொன். குமாரசாமி, இசைமாணி தவநாதன் ரொபேட், சங்கீதபூஷணம் எஸ்.பத்மலிங்கம் ஆகிய ஈழத்தின் புகழ்பூத்த கலைஞர்கள் பங்குகொள்கின்றனர்.

இவற்றுடன் தமிழ்பேசும் மக்களின் கிராமிய, பாரம்பரிய வாழ்வியலைப் புலப்படுத்தும் திருமலைக் கலைஞர் என்.டொமினிக் குழுவினின் 'கிராமிய இசைத் தென்றல்' நிகழ்ச்சியும், பவானி குகப்பிரியாவின் நெறியாள்கையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துமகளிர்கல்லூரி மாணவிகளின் 'காவடி நடனம்'

ஷர்மிளாவின், மட்டக்களப்பு விபுலானந்தா இசைநடனக் கல்லூரி மாணவிகள் வழங்கும் 'எரிமலைகள்' நாட்டிய நாடகம் என்பனவும்,

இராமநாதன் நுண்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கிருஷாந்தி ரவீந்திராவின் சிறப்பு நடன நிகழ்ச்சியான 'நாட்டியாஞ்சலி'யும் மேடையேற்றப்படவுள்ளன.

இலங்கையின் பலபாகங்களிலும் பல்லாயிரக்கணக்கான தடவைகள் மேடையேற்றப்பட்ட மோசடியுற்ற உள்ளகப் பிரச்சினை சார்ந்த நாடகமான, பேராசிரியர் சரத் சந்திராவின் 'மனமே', ஆக்கிரமிப்புப் படையினரின் செய்கைகளால் விளையும் போர் அனர்த்தங்களை விளக்கும் தர்மசிறி பண்டாரநாயக்காவின் 'றோஜா வனத்துப் பெண்கள்', திருமறைக் கலாமன்றத்தின் - திருமலைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் 'கூடித் துயர் வெல்' நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேற்றப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களின் பாராட்டைப் பெற்ற மனித அவலங்களில் உணர்வுகளை வெளிக்காட்டும் புதுவை அன்பனின் புரட்சிப் பறவைகள் வழங்கும் 'கரைதேடும் ஓடங்கள்'

மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரிக் கலைஞர்கள் வழங்கும் எம்.பி.ரவீந்திராவின் 'நெருப்புக்குள் வாழ்வு' , கலைக் கல்லூரிக் கலைஞர்கள் வழங்கும், என்.பாலாவின் 'இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா', தேவானந்தாவின் 'அக்கினிப் பெருமூச்சு' ஆகிய நாடகங்களும்,

பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் பாராட்டைப்பெற்ற தமிழீழ விடுதலை இசைக் குழுவினரின் 'தாயக இராகங்கள்' சிறப்பு இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சீமெந்து வாளி வீழ்ந்து தொழிலாளி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கட்டடம் கட்டும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த தொழிலாளியின் தலையின்மீது சீமெந்து வாளி வீழ்ந்து - படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

நேற்றுமுன்தினம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வங்கி ஒன்றுக்கு "கொங்கிறீட்" வேலைசெய்து கொண்டிருந்தவேளையிலே, தவறுதலாக இந்தச் சம்பவம் நிகழ்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருள்பிரகாசம் யோகன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தநிலையில் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.(சு,ரா)

# குழந்தையின் சங்கிலியை திருட முயற்சித்த பெண்

## யாழ். ஆஸ்பத்திரியில் அகப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

இரண்டு வயதுக் குழந்தையின் சங்கிலியைத் திருடமுற்பட்ட பெண் அகப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினம் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

புத்தூர் - ஆவரங்காலைச் சேர்ந்த நந்தினி என்ற பெண், தனது இரண்டு வயதுடைய ஜென்சா எனும் குழந்தையை வைத்தியரிடம் சிகிச்சை பெறுவதற்காகக் கூட்டிவந்திருந்தார். சிகிச்சையின் பின், மருந்து எடுப்பதற்காகக் குழந்தையை அமர்த்திவிட்டுச் சென்றவேளை, ஒரு பெண் தூர இடத்திற்கு அக்குழந்தையைக் கொண்டுசென்று, சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளார். இச்சம்பவத்தை அருகில் நின்றவர்கள் கண்டுவிடவே கையும் மெய்யுமாக அவர் பிடிபட்டுள்ளார். வைத்தியசாலைக் காவலாளியிடம் ஒப்படைக்கப்பட்ட பெண்ணை - காவலாளிகள் எச்சரித்து விடுவித்தனர். (ரா,சு,லி)

# அரியாலை கிழக்குக் கடலில் மீன்பிடிக்க படையினர் தடை!

(சரசாலை)

அரியாலை கிழக்கில் கடலில் மீன்பிடிப்பதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர்.

அரியாலை கிழக்குக் கடற்பரப் பிற்கண்மையில், படையினரின் 514 ஆவது பிரிகேட் இராணுவமுகாம் அமைந்துள்ளது. இதனால் படையினர் தமது முகாமிற்கு 1 கி.மீ. உடபட்ட பகுதிகளில் மீன்பிடிக்க கடந்த திங்கட்கிழமை முதல் அனுமதி மறுத்துள்ளதாகக் குருநகர் சிறகுவலைச் சங்கச் செயலாளர் அன்ரனி தாஸ் தெரிவித்தார்.

இப்பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை வழிமறித்த படையினர், தமது முகாம் அமைந்திருக்கும் பகுதியில் இருந்து 1 கி.மீ. கடற்பரப்பில் மீன்பிடிக்க அனுமதிக்க முடியாது எனத் திருப்பி அனுப்பியுள்ளனர்.

படையினர் அனுமதி மறுத்ததால், மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் 500 இற்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மீன்பிடிக்க வீசப்பட்டிருந்த வலைகளைப் படையினர் பறிமுதல் செய்துள்ளதாகவும், இவ்விடயம் தொடர்பாக இராணுவத்தினருடன் பேச்சு நடாத்தவுள்ளதாகவும் அன்ரனிதாஸ் மேலும் தெரிவித்தார்.

## வயோதிபர் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

ஆட்டுக்கடாவினை விற்றவர் அதற்குரிய பணத்தினைக் கேட்கச் சென்றபோது, தாக்கப்பட்டுப் படுகாயமடைந்தநிலையில் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தம்பசிட்டி - நாவலடியைச் சேர்ந்த சரவணரத்தினம் (வயது 78) என்பவர் தனக்குச் சொந்தமான ஆட்டுக்கடாவினை விற்றுவிட்டுப் பணத்தினைக் கேட்கச்சென்றபோது, ஆட்டுக்கடாவினை வாங்கியவர்கள் தாக்கியதால் தலையில் படுகாயமடைந்தார்.

(13)


# பணிநிலை வேண்டுகை

சுயவிபரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும்.

**நேர்காணல் நடைபெறும் இடம்:- ஆயப்பகுதி, நடுவப் பணியகம், கிளிநொச்சி காலம் :-12.04.2003, மு.ப 10.00 மணி**

## பணிநிலை

| | | | |
|---|---|---|---|
| 01) ஆய அலுவலர் | (இருபாலாரும்) | 05) சமையலாளர் | (ஆண்கள்) |
| 02) ஆய உதவியாளர் | (ஆண்கள்) | 06) சமையல் உதவியாளர் | (ஆண்கள்) |
| 03) எழுதுநர் | (ஆண்கள்) | 07) பாதுகாப்புப் பணியாளர் | (ஆண்கள்) |
| 04) தட்டெழுத்தாளர் | (ஆண்கள்) | 08) மொழிபெயர்ப்பாளர் | (ஆண்கள்) |

## கல்வித் தகைமை

பணிநிலை 01,03 இற்கு க.பொ.த(உ/த) சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 02 இற்கு க.பொ.த(சா/த) கற்றிருத்தல்.
பணிநிலை 04 இற்கு க.பொ.த(சா/த) சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல்.
பணிநிலை 05 இற்கு உணவுவகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல்.
பணிநிலை 06 இற்கு 8 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல்.
பணிநிலை 07 இற்கு தேகாரோக்கியமும், நன்னடத்தையுமுடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது.
பணிநிலை 08 இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக்கூடியவர். எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

## சிறப்புச் சலுகை

கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்துதரப்படும்.

# ஆயம், நிதித்துறை, தமிழீழம்

(சி-744)

# பக்க விளைவுகள் எதுவுமற்ற சித்த மருத்துவம்

வலி தென்மேற்குப் பிரதேசசபை
சித்த ஆயுர்வேத வைத்திய அதிகாரி
திருமதி தவமலர் விஜெயரட்ணம்
அவர்களுடனான செவ்வி.

*கேள்வி:* சித்த மருத்துவம்- ஏனைய ஆங்கில மருத்துவ முறைகளில் இருந்து எவ்வாறு வேறுபடுகின்றது?

*பதில்:* பக்க விளைவுகள் இல்லை. இயற்கையுடன் ஒத்துப் போகிறது. மக்கள் பத்தியங்கள் இருக்கவேண்டும் என்ற நிலைப்பாடு, கட்டுப்பாடுகள் இருக்கின்றன. உடனடியாக நோய் நீங்குவதில்லை. ஆனால், நாட்கள் எடுத்தாலும் பயன் உண்டு.

மூலிகைகள் இங்கு கூடியளவு உற்பத்தியானால், உள்நாட்டிலேயே மருந்துகளைப் போதியளவு செய்து கொள்ளலாம். ஆங்கில மருத்துகளைப்போல வெளிநாட்டிலிருந்து மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

சித்தர்கள் தங்களது சித்தத்தினாலும், சாஸ்திர விதிமுறைகளைக் கையாண்டும் மருந்துகளை நோயாளர்களுக்குக் கொடுத்துக் குணமடையச் செய்தனர்.

ஏனைய மருத்துவமுறையில் செலவுகள் அதிகம். சித்தமருத்துவத்தில் அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடிய முறையில் மிக எளிய செலவில் மருந்துகள் வழங்கப்படுகின்றன.

*கேள்வி:* இந்த வைத்தியமுறை மூலம் நோய்கள்தீர காலதாமதம் எடுத்தாலும், பக்கவிளைவுகள் இல்லை என்று கூறுகிறார்கள். அது பற்றி உங்கள் கருத்து?

பதில்: பக்க விளைவுகள் இல்லாத் தன்மைக்குக் காரணமாக ஔடதத்துடன் சேர்த்து அனுமானமும் பத்தியாபத்திய முறைகளும் கூறப்படுகின்றன. அதாவது, அனுமானம் என்று சொல்லும்போது, அது -அந்த மருந்தின் வீரியத்தை (Power) கூட்டுகின்றது. உதாரணமாக- காய்ச்சலுக்குக் கொடுக்கப்படுகின்ற குளிகை வெற்றிலை



திருமதி தவமலர் விஜெயரட்ணம்

சாற்றுடனும், சளிக்கு கொடுக்கப்படுகின்ற கோரோசனை மாத்திரை கற்பூரவள்ளி சாற்றுடனும் கொடுக்கப்படுகிறது. இங்கு அனுமானம் - குடிநீராகவோ, சாறுகளாகவோ, தேன், வெண்ணெய் போன்றவையாகவோ அமையலாம். பத்தியாபத்திய முறைகள் என்று சொல்லும்போது, செய்யக்கூடியவை, செய்யக் கூடாதவை ஆகியன அடங்கும். உணவில் சில மருந்துகளுக்கு - பால், சோறு, உறைப்பு, புளிப்பு, எண்ணெய் போன்ற ஆகாரங்கள் ஜீரணம் அடையமுடியாதவை. அதனால், நன்கு ஜீரணம் அடையக் கூடிய ஆகாரங்களைப் பத்தியமாகப் பயன்படுத்தப்படலாம். புகைத்தல், குடித்தல், கடினவுழைப்பு, மன உளைச்சல் ஆகிய பழக்கவழக்கங்களைத் தவிர்த்தல் நன்று.

ஒரு மருந்துப்பொருள் தயாரிக்க அதிகளவிலான மூலிகைகள் பயன்படுத்தப்படுவதும் ஒரு காரணம். மூலிகை ஒன்றின் செய்கை மலமிளக்கியாகவும், மற்ற மூலிகை மலம் இறுக்கி ஆகவும் செயற்படுகின்ற தன்மையுள்ளது. இதனால், நோய் நிதானமாகவே தீரும்.

*கேள்வி:* ஏனைய வைத்திய சிகிச்சைமுறைகள் மூலம் குணப்படுத்த முடியாத சில நோய்களை- சித்த ஆயுர்வேதமுறை மூலம் குணப்படுத்த முடியுமா?

பதில்:- ஆம். ஏனைய சிகிச்சை முறைகளைப் பாவித்து, இயலாத கட்டத்தில் அதாவது, கடைசிக் கட்டத்தில் எம்மிடம் வருவதுமுண்டு. இக்கட்டத்தில் - எமது வைத்திய முறையில் நம்பிக்கை வைத்தே நோயாளர்கள் வருகின்றனர். கூடுதலாக - பாரிசவாதம், சர்மரோகம், சுவாசரோகம், பெரும்பாடு, மூலரோகம், வெள்ளை படுதல் போன்ற நோய்களுக்கு இவ்விதம் வருவது குறிப்பிடத்தக்கது.

வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்து சிகிச்சை பெற்றுக் குணமடைந்தவர்களும் உள்ளார்கள். அத்துடன், இங்கிருந்து வெளிநாடுகளுக்கு மருந்துப் பொருட்கள், எண்ணெய் என்பன விரும்பிக் கேட்டு அனுப்பப்படுகின்றன.

சித்த ஆயுர்வேத வைத்தியத்தில், குழந்தைகளுக்கு எண்ணை வகைகளும், வயதானவர்களுக்கு ஏற்படும் வாத, சர்மரோகங்களுக்கும், மற்றைய சிரசு ரோகங்களுக்கும் தைல வகைகளும் பயன்படுத்தப்படுகின்றன. லேகியம் போன்ற மருந்துகள் நரம்புகளை உரமாக்கி, புத்துணர்ச்சியைக் கொடுத்து நோயைக் குணமடையச் செய்கின்றன.

கேள்வி:- எங்களுடைய பிரதேச மூலிகைகள் சித்த மருத்துவங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறதா?

பதில்:- ஆம். சித்த மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுவது குறைவு. பெரும்பாலும் உள்ளூர்களிலே இருக்கும் பெரும்பாலான மூலிகைகளைப் பயன்படுத்தியே இங்கு மருந்துகள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு மருந்துக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட மூலிகைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றுள் பிரதானமாகப் பயன்படுத்தப்படுவதையும் குறிப்பிடுகின்றேன்.

சுவாச ரோகத்துக்கு ஆடாதோடை மூலிகை அச்சாறும், மலம் இளக்கியாக நிலபாவல் சூரணமும், புஷ்டியை உண்டாக்க குன்ம லேகியமும் (நீற்றுப் பூசணி மூலிகை), மூலரோகத்துக்கு கரணைக்கிழங்கு லேகியமும் (கரணைக்கிழங்கு மூலிகை), எனப் பல்வேறு மூலிகைகள் பயன்படுத்தப்படுகினறன.

**நேர்காணல்: உஷா,கலாநந்தி**




# பூக்களை அதிக நாட்களுக்கு பாதுகாப்பது எப்படி

வீட்டில் அழகான பூக்களை வைப்பதால், வீட்டின் அழகு பன்மடங்கு கூடுகின்றது. ஆனால், எங்களுக்குப் பரிசாகக் கிடைத்த அல்லது வாங்கிய பூச்செண்டுகளை வைத்தால் ஓரிரு நாட்களிலேயே காய்ந்து விடுவது நமக்கு வருத்தத்தைத் தருகிறது. அவ்வாறு வாடாமல் பல நாட்களுக்குப் பூக்களை பாதுகாக்க முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? இதோ அதற்கான குறிப்புகள்-

முழுமையாக மலராத மொட்டுக்களைத் தேர்ந்தெடுப்பது நல்லது. அப்போதுதான் அவை வீட்டினுள் வைக்கும்போது மலரும். அத்துடன், நீண்ட நாட்களுக்குக் காயாமல் இருக்கும். ஐந்து இலைகளை விட்டு, காம்பை வெட்டவும், பூக்களுக்குச் சேரவேண்டிய தண்ணீர் மற்றும் சத்து- காற்றடைப்பால் சேராமல் போவதைத் தடுக்க, காம்



பைத் தண்ணீருக்கு அடியில்



வைத்து வெட்ட வேண்டும். காம்பைச் சாய்வாக வெட்டுவதால் பூக்களுக்கு அதிக அளவில் தண்ணீர் கிடைக்க வாய்ப்புள்ளது.

அழுகிய, சேதமடைந்த இலைகளையும், பூக்களின் இதழ்களையும் அகற்றிவிட வேண்டும். பூக்களின் காம்புகள் முழுமையாக மூழ்கும் வகையில் தண்ணீரை ஊற்றி, 24 மணிநேரம் வைக்க வேண்டும். இதன் பிறகு பூக்களை சாடியில் வைக்கலாம்.

பூக்கள் அதிக நாள் வாடாமல் இருக்க, அவற்றைக் காற்றுப்படும் வகையில் ஜன்னலுக்கு அருகில் வைப்பது நல்லது. பழங்கள், காய் கறிகள் ஆகியவை "எதிலீன்" என்ற வாயுவை வெளியிடுகின்றன. இதனால், பழங்கள், காய்கறிகள் ஆகிய வற்றிற்கு அருகில் பூக்களை வைத்தால் அவை விரைவில் வாட வாய்ப்புள்ளது.

பற்றீரியாக்கள் வளர்ந்து பூக்களின் தண்ணீர் ஈர்க்கும் சக்தியைப் பாதிக்காமல் இருக்க, சாடியில் செம்பாலான சிறிய பொருளைப் போட்டு வைக்கலாம்.

இதுமட்டுமன்றி தினமும் சாடியிலுள்ள தண்ணீரை மாற்ற வேண்டும்.

குறிப்பு:- எல்லா விதப் பூக்களும் நீண்டநாள் நீடிக்காது. சில பூக்கள் மற்றவையைவிட சீக்கிரம் வாடிவிடும்.

# பளபளக்கும் சமையல் அறை



சுத்தமான சமையல் அறையில் சமைக்க வேண்டும் என்றால் எல்லோருக்கும் பிடித்ததுதான். ஆனால், சமையல் அறையைச் சுத்தம் செய்வது எப்படி.

அதிக சிரமம் இன்றிக் குறைந்த நேரத்தில் பளபளப்பான சமையல் அறையைப் பெற உங்களுக்காகச் சில குறிப்புக்கள்.

**அலுமாரி**

முதலில் சமையலறையிலுள்ள அலுமாரிகளைச் சுத்தம் செய்வது நல்லது. அதிலுள்ள பொருட்களைக் கீழே வைத்துவிட்டு, காய்ந்த துணியால் தூசியைத் துடைத்து விடவும்.

ஒரு மேசைக் கரண்டி எலுமிச்சைப் பழச்சாற்றுடன், 2 மேசைக் கரண்டி தேங்காய் எண்ணெய் என்ற விகிதத்தில் தேவையானளவு பொலிஷைத் தயாரிக்கவும். மரத்தாலான அலுமாரிகளை இதைக் கொண்டு பொலிஷ் செய்யவும்.

**குளிர்சாதனப் பெட்டி**

குளிர்சாதனப் பெட்டியின் உட்பக்கத்தைச் சுத்தம் செய்த பின்னர், வெளிப்பக்கத்தைச் சுத்தம் செய்யவும்.

1/4 டம்ளர் பேக்கிங் பவுடரை 11/2 லீற்றர் தண்ணீரில் கலக்கவும். இதைக் கொண்டு குளிர்சாதனப் பெட்டியின் உள்பக்கத்தைச் சுத்தம் செய்யவும். வெளிப்புறத்தைச் சவர்க்கார நீரில் நனைத்த துணியால் சுத்தம் செய்யவும்.

**ஓவன்**

ஓவனில் வைக்கக்கூடிய பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பவும். அதில் சில துளிகள் எலுமிச்சைச் சாற்றைச் சேர்த்து ஓவனில் வைத்துக் கொதிக்க விடவும். அதன்பிறகு, காய்ந்த துணியால் உட்புறத்தைத் துடைத்துவிடவும். வெளிப்புறத்தை சவர்க்கார நீரில் நனைத்த துணியால் சுத்தம் செய்யவும்.

**அடுப்பு மேடை**

அடுப்பிலும் அதை வைக்கும் மேடையிலும் சோடாவைத் தெளித்து 5 நிமிடம் ஊற வைக்கவும். அதன்பிறகு, லேசாகத் தேய்த்து அழுக்கை நீக்கவும்.

**இதோ உங்கள் பளபளக்கும் சமையலறை தயார்!**

## அழகுக் குறிப்புக்கள்

பற்கள் பளப்பளப்பாக இருக்க எலுமிச்சைச் சாற்றுடன் உப்புக் கலந்து பிரஷ்செய்யவும்.

குளிப்பதற்கு முன்பு மஞ்சள் பொடியையும் நல்லெண்ணையையும் கலந்து, முகத்தில் தடவி 5 நிமிடம் காயவிடவும். அதன்பிறகு வெதுவெதுப்பான தண்ணீரால் முகத்தைக் கழுவவும்.

கசகசாவை ஊறவைத்து, அரைத்து முகத்தில் தடவவும். காய்ந்ததும் கழுவினால் முகத்தில் சுருக்கம் விழாமல் பாதுகாக்கலாம்.

பப்பாளி ஜூஸ் தடவினால் வியர்க்குரு கொப்பளங்கள் மறைந்து முகம் பளபளக்கும்.

எல்லாவிதப் பழங்களும் முகத்திற்கு நல்லது. அவற்றை மசித்து முகத்தில் பூசினால் முகம் உடனுக்குடன் சுத்தமடைந்து பளபளப்பாய் காட்சி தரும்.

# மில்க் சொக்லேட்

பால் மா - 200 கிராம்
சீனி - 200 கிராம்
குளுக்கோஸ் - 50 கிராம்
லேசாக வறுத்த
கஜூ - 1 மேசைக்கரண்டி
பட்டர் - 2 கரண்டி
Pink கலர் எஸன்ஸ் - 1/4 கரண்டி.



**செய்முறை:-**

அடுப்பைப் பற்ற வைத்துக் கனமான ஒரு பாத்திரத்தில் பட்டர், சீனியைப் போட்டுக் கிளறிக் கொண்டே இருக்கவும். இரண்டும் கலந்து நுரைத்து வரும்போது- பால் மா, குளுக்கோஸ், எஸன்ஸ் எல்லாம் விட்டுக்கிளறவும். கலவை சிவக்காது திரண்டு வரும்போது, நெய் தடவிய ஒரு பாத்திரத்தில் கலவையைக் கொட்டிப் பரப்பவும். அதன்மேல் வறுத்த கஜூவைத் தூவிக் கத்தியால் துண்டு போடவும். வாசனையாகவும், சுவையாகவும் இருக்கும்.

# பெண்ணாகி வந்த பூங்காற்று

**பெண்கள் சார் அமைப்புக்கள்**

அரச சார்பற்ற நிறுவனங்களின் உலகப் பெண்கள் உச்சி மாநாடு முதல் முதலாக 1975 இல் மெக்சிக் கோவில் நடைபெற்றது. இம்மகாநாட்டில் சுமார் ஆறாயிரம் பெண்கள் கலந்துகொண்டனர். இவ்வகையில் இரண்டாவது மாநாடு டென்மார்க்கிலுள்ள ஹொப்பன்ஹேகனில் நடைபெற்றபோது, அதில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த பத்தாயிரம் பெண்கள் கலந்து, தமது பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினர். மூன்றாவது மாநாடு இன்னும் பெரிதாக இருந்தது. 1985 இல் சுமார் பதினையாயிரம் பெண்கள் கென்யாவிலுள்ள நைரோபி நகரில் கூடித் தமது பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்குரிய வழி வகைகளை ஆராய்ந்தனர். இம்மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமுல் படுத்தப்பட்டு, பெண்களின்நிலை ஓரளவு உயர்ந்துவரும் நிலையில், நான்காவது உலகப் பெண்கள் மாநாடு - 1995 ஆம் ஆண்டு சீனநாட்டின் பீஜிங் நகரில் நடைபெற்றது. இம்மாநாட்டில் உலகம் முழுவதிலுமிருந்து 187 நாடு களைச் சேர்ந்த சுமார் முப்பதாயிரம் பெண்கள் கலந்து கொண்டனர். மிக அதிக எண்ணிக்கையான பெண்கள் கலந்துகொண்ட மாநாடு என்ற சிறப்பையும் இது பெற்றுக் கொண்டது.

"உலகத்தைப் பெண்களின் கண்களுக்கூடாகப் பாருங் கள்" என்ற தொனிப் பொருளில் இக்கருத்தரங்கு நடை பெற்றது. பெண்கள்- பொருளாதாரம், அரசியல், மனித உரிமைகள், சமாதானம், கல்வி, சுகாதாரம், சூழல், சமயம் ஆகிய முக்கிய எட்டுத்துறைகளில் எதிர்கொள்ளும் பிரச்சி னைகள் பற்றிப் பேசியதால், எட்டு இதழ்களைக் கொண்ட ஒரு சின்னம், கருத்தரங்கச் சின்னமாக இருந்தது.

உலக அபிவிருத்தி, உலக சமாதானம், ஆண்-பெண் சமத்துவம் ஆகிய மூன்று முக்கிய கோணங்களிலிருந்து இந்த எட்டுப் பிரச்சினைகளும் பேச்சு, கலந்துரையாடல் பட்டறைகள், கலாசார நிகழ்வுகள், ஊர்வலங்கள், கண்காட் சிகள் என்பன போன்ற பல உத்திமுறைகளுக்கூடாகப் பார்க்கப்பட்டன.

"பெண்கள் மிகநீண்ட யுகங்களாக மௌனமாக இருந்து விட்டார்கள்" என்று இம்மாநாட்டில் கலந்துகொண்ட பெனாசிர் பூட்டோ அவர்கள் கூறினார்கள். "பெண்களின் சக்தியும், பெண்களின் எண்ணங்களும், பெண்களின் கருத் துக்களும், காரியமாற்றும் திறனும் உலக நாட்டு அரசு களின் கண்களைத் திறக்கச்செய்யும்" என்று இம்மகா நாட்டுக்கு வந்திருந்த கிளாரி கிளிண்ரன் எடுத்துக் கூறினார்.

இம்மகாநாட்டில் பல்வேறு கலாசாரங்களைக் கொண்ட, பல்வேறு வயதான பெண்களும் கலந்துகொண்டமையால், உலகில் காணப்படும் உடை வகைகள் அனைத்தையும் ஒருங்குசேரப் பார்க்க முடிந்தது. ஆயினும், அவர்கள் அனைவரும் எளிமையான உடை அணிவதில் ஒத்த கருத் துள்ளவர்களாக இருந்தனர். அழகால் சாதிக்க முடியாத பல விடயங்களை, அறிவால் சாதிக்கலாம் என்பதில் நம்பிக்கைகொண்டு செயற்பட்டனர்.

பெண் கருக்கலைப்பு, பெண் சிசுக் கொலை, பாலியல் வல்லுறவு ஆகிய விடயங்களுக்கு எதிரான குரல்கள் இக்கருத்தரங்கில் மிக ஓங்கி ஒலித்தன. ஆயிரக்கணக்கான பெண்கள் கறுப்புடை அணிந்து, கையில் மெழுகுவர்த்தி ஏந்திப் பாலியல் வல்லுறவுக்கு எதிராகச் செய்த மௌன ஊர்வலம் மிகவும் வலுமிக்கதாக அமைந்திருந்தது.

பெண்கள் தம் உளச் சமநிலையையும், உணர்வுச் சம நிலையையும் பேணுவதில் பெருமளவு உதவக்கூடிய யோகாசனப்பயிற்சி, தளர்வுப் பயிற்சி, அக அமைதிப் பயிற்சி, சுவாசப்பயிற்சி, தியானப் பயிற்சி போன்றவற்றையும் இந்த ஒன்றுகூடல் பயிற்றுவித்தது. பாதிக்கப்படும் பெண்களுக்கு எப்படி உளவளத்துணை வழங்கலாம் என்பது பற்றி மிக நீண்டநேரம் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

உலகின் பல மூலைகளிலும் இருந்து, பல்வேறு மொழி களிலும் எழுதிக் கொண்டிருக்கும் பெண் எழுத்தாளர்கள் ஒன்றுகூடிக் கலந்துரையாடினர். ஒருவரது எழுத்துக்களை மற்றவர் தமக்கிடையில் பரிமாறிக் கொண்டனர். உணர்வுகள்

**கோகிலா மகேந்திரன்**

உள்ளே அமுக்கப்படாமல், கலைப் படைப்புக்களாக வெளி வருவதிலுள்ள நன்மைகள் பற்றி விவாதித்துக் கொண்டனர்.

பேரினால் பாதிக்கப்பட்ட நாடுகளைச் சேர்ந்த பெண்கள்- தமது பொதுப்பிரச்சினைகளைப் பகிர்ந்து கொண்டனர். உலகம் முழுவதிலுமே பொதுவாகப் போர் நடைபெற வேண்டும் என்ற தீர்மானத்தை எடுப்பவர்கள் ஆண்களாக இருக்க, அந்தப்



போரினால் அதிக அளவு பாதிக்கப்படுபவர்கள் பெண்களாக வும், குழந்தைகளாகவும் இருக்கும் நிலைமை பற்றிக் காரசாரமாக விவாதிக்கப்பட்டது.

இம்மாநாடு உலகளாவிய மட்டத்தில் பெண்களின் விழிப்புணர்வில் பெரும் உயர்வை ஏற்படுத்தியது. உலகப் பெண்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து- எமது வல்லமைகள் முழுவதையும் திரட்டும்போது, பெரிய பெரிய மாற்றங்களை உலகில் ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை தோன்றி யுள்ளது.

இது உலகுக்கு எப்படிப் பொருந்துமோ, அப்படியே எமது நாட்டிற்கும் பொருந்தும். எல்லாப் பெண்களும் ஒரு குடையின்கீழ்ச் சேர்ந்து நிறுவனமயப்படும்போது, பெண்களின் பிரச்சினைகள் தீர்வதற்கு நீண்ட காலம் எடுக்காது.

யுனிசெப்பின் சென்ற ஆண்டறிக்கை கூறுவதுபோல- பெண்களினதும், குழந்தைகளினதும் விருத்தியிலும், அவர் களது உரிமைகள் உணரப்படுவதிலுமே மனித முன் னேற்றம் தங்கியுள்ளது என்பதை மனதில் ஆழ நிறுத்து வோம். (முற்றும்)

---

# தலைவி நீ தலை நிமிர்...!

நாடென்றாலும், வீடென்றாலும் – அதேபோன்று நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வியாபாரஸ் தாபனங்கள் போன்ற எவையென்றாலும் அவற்றின் உயிர்நாடி நிதியாகும். 'பணமில்லாதவன் பிணம்' என்பார்கள் .அதாவது, செயலற்றுக் கிடப்பவன் என்று கொள் ளலாம். பணமில்லாவீட்டால் எல்லாமே செயலற்றுப் போய்விடும்.



எனவே பணத்தைச் செலவு செய் வது, பண வருவாய் பெறுவது ஆகிய வற்றைத் திட்டமிடுவதில் அதிகக வனம் செலுத்த வேண்டி யது அவசி யமாகும்.

தேவையற்ற செலவுகளைக் குறைப் பது மிக முக்கியமான ஒன்றென்றாலும், அதைத் திட்ட மிட்டுச் செயற்படுத்துவது மிகச் சிரமமான ஒன்றாகும்.

தேவையற்ற செலவு எது என்பதில் ஒருவருக்கொரு வர் அதிக முரண்பாடான கருத்துக்களைக் கொண்டி ருப்பது வழமை. ஒருவருக்கு மிக அவசியச் செலவாகத் தோன்றுவது, மற்றவருக்கு அநாவசியச் செலவாகத் தெரியும்.

உதாரணமாக– ஒரு புதிய சேலை வாங்க மனைவி ஆசைப்படுவதைக் கணவன் தேவையற்ற செலவெனக் கருதுவான்.கணவன் புதிய சைக்கிள் வாங்க நினைப்பது அநாவசியச் செலவாக மனைவிக்குத் தோன்றும். இருவரும் அவரவர் ஏன் அதை வாங்க விரும்புகிறார்க ளென விசாரித்துத் தெரிந்துகொண்டால், உண்மையில் அது தேவையான செலவுதானா என்று தீர்மானிக்கலாம்.

அடுத்தவரைப் பார்த்து நாமும் அதுபோல் வாழ வேண்டுமென்று எண்ணுவதனாலே பல அநாவசியச் செலவுகள் ஏற்படுகின்றன.

அண்மையில் ஒரு திருமணத்தின்போது மணமகள் அணிந்திருந்த அணிகலனைப் பார்த்து "சென்றவாரம் வந்த டிசைனில் உடனேயே செய்வித்துவிட்டீர்களே" என்று வியந்தேன். மணமகளின் தாயார் சிரித்துக் கொண்டே "இது என்னுடைய அம்மா செய்வித்து, அவருடைய இளமைக் காலத்தில் போட்டது. எனக்குச் சீதனமாகக் கிடைத்து, இப்போது மகளுக்குக் கொடுக் கும்போது அதே டிசைன் வந்துவிட்டது." என்றார்.

உடைகள், அணிகலன்கள் போன்றவை இப்படி மாறி மாறி வரும் என்ற உண்மையைப் புரிந்து கொண்டால் தேவையற்ற செலவுகள் பலவற்றைத் தவிர்க்கலாம்.

பொருட்களை உபயோகிப்பவர்களையே அவற்றை வாங்க வைப்பது அநாவசியச் செலவைத் தவிர்க்க ஒரு வழியாகும். காய்கறிகளை – உணவு தயாரிப்பவரே வாங் கினால், அவற்றை வாங்க ஏற்பட்ட செலவையும், அவற்றின் விலையையும் நினைவிற்கொண்டு வீணாக் குவதைத் தவிர்ப்பார்கள். சந்தை நிலைவரத்தைப் பொறுத்து வரு வாய்க்கு ஏற்ற பொருட்களைத் தெரிவு செய்வார்கள்.

வீணாக்கும் பொருட்களை உபயோகமாகக் கூடிய வையாக்குவதும், மலிவாகப் பொருட்கள் கிடைக்கும் காலத்தில் அவற்றை வாங்கி விலைகூடும் காலங்களில் உபயோகிக்கக்கூடிய வகையில் அவற்றைப் பதப்படுத்தி வைப்பதும் செலவைக் குறைக்க ஒரு வழியாகும்.

வீட்டுத் தோட்டம் செய்வது, கோழி, ஆடு, மாடு வளர்ப் பது ஆகியவையும் செலவைக் குறைக்கும் வழியாகும். இவற்றில் வீட்டின் ஒவ்வோர் அங்கத்தவரையும் ஈடுபடச் செய்வது – சகலரும் வீட்டிற்கான வருவாயைத் திரட்ட உதவ வழிவகுப்பதாகும்.

இவையனைத்துமே நீ உன் வேலைகளைக் கவனித்துக்கொண்டு வெறுமனே இருக்க நடந்து விடாது. அனைத்துமே திட்டமிட்டுச் செயற்படுத்தப்படும் போதுதான் நடைபெறும். ஆகவே, இவற்றைக் கடைப் பிடிக்கவும், அதனால் எவ்வளவு விரயத்தைத் தவிர்த்து வருவாயைக் கூட்டலாம் என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளவும் திட்மிட்டுவது அவசியமாகும்.

இன்று பலவீடுகளுக்கு வெளிநாட்டில் பணிபுரிவோரி டமிருந்து கிடைக்கும் பணமே வருவாயாக இருக்கின்றது. இவ்வாறு கிடைக்கும் பணத்தின் கண்ணீர்க்கதையை அறியாததால், வீட்டுத் தலைவி அதைத் தண்ணீராகச் செலவு செய்வது வழமையாகி விட்டது.

நீ ஒன்றை நன்றாக உன் மனதில் பதித்துக்கொள். இது தொடர்ந்து வரப்போகும் வருமானமாயிருக்குமென உறுதியாகக் கூறமுடியாது. அத்துடன், நாணய மாற்றுவீத மாற்றங்கள் இந்த வருமானத்தின் தொகையை மாற்றலாம்.

நம் நாட்டின் நிதிநிலை கேடுற்றுள்ளபோது, அமெரிக்க டொலரும், யூரோ நாணயமும் மாற்றப்படும் போது கூடிய இலங்கை ரூபா கிடைக்கும். நம் நாட்டு நிதிநிலை அபிவிருத்தியடைந்தால், இலங்கை ரூபாவும் கூடிய பெறு மானமுள்ளதாக மாறும். அதன் பயனான வெளிநாட்டு நாணயத்திற்குக் குறைவான இலங்கை ரூபாவே கிடைக் கும்.

எனவே உன் வரவு – செலவைத் திட்டமிட்டு அதன் படி செயற்பட இன்றே தீர்மானமெடு. உடனடியாக வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்துக்கொள்.

அடுத்து அதைச் செயற்படுத்துவது பற்றிச் சிந்திப் போம்.

**யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

---

# கவிதைச் சோலை

## புத்துயிர்த்தல்



இறுகிய பாறைகளினூடிருந்து
வீறு கொண்டதொரு புல்லாய் நிமிர்வேன்
கூவத்தான் முடியாதாயினும்
ஈனஸ்வரத்திலேனும் என் பாடல்களை
முனகியபடி
யார் முன்னும் பணிதலன்றி
எனது உணர்வுகளோடும் அவர்களோடும்
எவ்வகை வாழ்வெனப் புரியாத இது
குழப்பமிகு வாழ்வேதானாயினும்
வாழ்வேன்
வாழ்வேன்
வாழ்வேன் நான்.

எனது தகப்பனின்
நம்பிக்கையற்ற பார்வைகளினூடும்
தாயின் குமுறல்களினூடும்
உறவுகளின்
என்திருமணம் பற்றிய
சகிக்க இயலாத பேச்சுக்களினூடும்
சுதந்திரமாய் நான் வாழ்வதென்பது எவ்வாறு?

என் இனிமை,
இதம் என்பனவெல்லாம் அவளுக்கானவை
அவளற்ற என் உலகுபற்றி
கனவுகளும் வேண்டாம் ஒருவருக்கும்
போலியும்
வஞ்சகப் பாசமும் நிறைந்த முகங்கள்தான்
எனைச் சூழ எங்கும்
மென்மேலும் என்னால்
தோல்வியுறுதல் இயலாது
எனது அவள் தோழி மட்டுமல்ல..

அது பற்றியும் சொல்வேன்
அது காதல்
அவளது வேர்களைப் பிடுங்கி எறியவும்
பிறருக்கிருக்கும் மனதின் பரப்பெங்கும்
கள்ளிச் செடிகள் நட்டுப் பார்க்கவும்
கணம் கணம் இங்குபோர்
எவ்விதம் பிரிவேன் அன்பே
எவ்விதம் வாழ்வேன் நான்?
ஆயினும் ஆயினும் வாழ்வேன்
ஆச்சரியமே யாயினும்
எனையழுத்தும் இவ்

~பெண்ணியா

## தெளிவு பெற்ற மதியினாய்

இறப்பவர் பலபேர் இளைஞர்கள் ஆனதால்
இளம் பெண்கள் பலர் விதவைகள் ஆனார்.
வீட்டுக்கு வீடிளம் விதவைகள் எத்தனை?
தந்தையை இழந்த பிள்ளைகள் எத்தனை?
நாட்டில் நிலைமைகள் இப்படித் தொடர்ந்தால்
இங்கிவர் படுந்துயர் எப்படித் தீர்வது?

இவர்களின் வாழ்வு இத்தோடு முடிந்ததா?
பயனுள்ள வாழ்வு வாழ முடியாதா?
காலம் முழுவதும் கைம்மைக் கோலமா?
குடும்பச் சுமையென குமைந்தவர் வாழ்வதா?
மறுமணம் ஒன்று தான் வாழ்வென்று இல்லை,
உழைத்துண்டு வாழும் சுதந்திரம் வேண்டும்.



திரௌபதி மானம் காத்திடக் கண்ணன்
பாரதக் கதையிலே பக்கமாய் வந்தான்.
தேடுதல் வேட்டையில் அகப்பட்ட மான்கள்
துயரினைத் துடைக்க எவரிங்கு வந்தார்?
விம்மி அழுதிடும் பிஞ்சு மனங்களை
வாழ்வு கொடுத்து தேற்றலும் வீரமே!

உலகினில் பாதி பெண்களானாலும்
சுதந்திரம் என்பது பெண்களுக்கில்லையே!
தாலியும் வேலியும் இடையினில் வந்தது.
"நாணும் அச்சமும் நாய்கட்கு" உகந்தது
எத்தனை காலம் பழமையில் அழிவது
நவயுகம் காண நங்கையர் வாரீர்.

~ சன்மார்க்கா.

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமம் தரும்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## உருத்திராட்சப் பூனை!

ஈராக்கில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்திவரும் அமெரிக்கா - தனது தாக்குதல் உத்திகளை மாற்ற வேண்டிய கட்டாயத்திலிருப்பதாக - அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் ஃபீல்ட் கடந்தவாரம் அறிவிப்பொன்றை விடுத்திருந்தார்.

பெருமெடுப்பில் - இராணுவத்தினரையும், டாங்கிகளையும் நகர்த்திக்கொண்டு - பக்தாத்தைப் பிடிப்பதற்கு இன்னும் சில நாட்களே என்று காலக்கெடுவைக் குறித்துக்கொண்டு செயற்பட்ட அமெரிக்கா - எதிர்பார்த்திராத விதமாக - ஈராக்கியப் படையினரின் யுத்த தந்திரோபாயங்களை எதிர்நோக்கவேண்டிவந்தது.

முன்னேறி வரும் அமெரிக்க - பிரிட்டிஷ் படையினருடன் நேரடி மோதல்களைத் தவிர்த்து - மறைந்திருந்து தாக்கியும், வாகன அணிகளை - விநியோகப் பாதையை ஊடறுத்தும், நகரம் சார்ந்த யுத்தமுறையைப் பயன்படுத்தியும் - ஈராக்கியப் படையினர் தமது தாக்குதல்களை மேற்கொள்ள ஆரம்பித்தது - அமெரிக்காவுக்கு மோசமான பாதிப்பாகவே அமைந்தது.

ஈராக்கியப் படை தந்த இந்தத் தாக்குதல் வழிமுறை- அமெரிக்கர்களின் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்துவதோடு, கைப்பற்றிய பகுதிகளின் பாதுகாப்புப் பற்றிய வினாக்களையும் மேலெழ வைத்திருக்கிறது.

இதனால் - எரிச்சலும், ஆத்திரமும் அடைந்திருக்கும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள், தமது தந்திரோபாயத்தை மாற்றிக்கொண்டு - சிறிய சிறிய அணிகளாகத் தாக்குதல் நடாத்த வேண்டுமென அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் ஃபீல்ட் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நாட்கள் சில கடந்துவிட்ட நிலையிலும் - அமெரிக்கர்களின் புதிய தந்திரோபாயம் பெரியளவில் பலனைத் தந்துவிட்டதாகக் கூறமுடியவில்லை.

எப்படியும் பக்தாத்தைக் கைப்பற்ற வேண்டும், சதாம் ஹுசைனைத் துரத்த வேண்டும் என அழுங்குப் பிடிவாதத்துடன் இருக்கும் அமெரிக்கர்கள் - தமது புதிய தந்திரோபாயமும், வெற்றியைத் தராத பட்சத்தில் - ஈராக்கிலுள்ள சாதாரண மக்கள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியிருக்கின்றனர்.

ஈராக்கிய மக்கள் கூடும் சந்தைப்பகுதிகள், பொது இடங்கள் என்பவற்றோடு மருத்துவமனைகளும் இப்போது அமெரிக்க - பிரிட்டிஷ் கூட்டுப்படைகளின் இலக்குகளாகிவிட்டன.

நேற்றுமுன்தினம் - பக்தாத்தில் செம்பிறைச் சங்கத்தின் பராமரிப்பிலிருந்த பிரசவ வைத்தியசாலையொன்றின் மீது - அமெரிக்க விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் பெருமளவு சிறுவர்களும், பெண்களும் படுகாயமடைந்திருக்கின்றனர்.

அதேவேளை - நேசநாட்டுப் படைகளின் சோதனை நிலையமொன்றில் - ஈராக்கியப் பெண்ணொருவர் செலுத்திவந்த வாகனமொன்றும் தாக்குதலுக்குஇலக்கானதில்- பொதுமக்கள் சிலர் கொல்லப்பட்டனர்.

தம்மீது தற்கொலைத் தாக்குதல் நடாத்தப்படுவதாக நினைத்துக்கொண்டே குறிப்பிட்ட வாகனத்தைத் தாம் தாக்கியதாக - அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சு இதற்கு விளக்கமும் கொடுத்திருக்கிறது.

தாக்குதல் எவ்வகையிலும் நடாத்தப்படலாம் என்ற அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் அமெரிக்கப் படையினரின் நிலையையும், இனிமேல் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் இந்த வகையிலேயே நியாயப்படுத்தக்கூடிய தன்மையையும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சின் அறிவிப்பு கோடிட்டுக் காட்டுகின்றது.

இந்தநிலையில் - நேற்றைய தினம் வெளியான செய்திகளின்படி - போர் நடவடிக்கைகளில் பயன்படுத்தக் கூடாது என விலக்கப்பட்டிருக்கும் - குறிப்பிட்ட பகுதியை இடைவெளிவிடாது தாக்கிச் சேதத்தை உண்டாக்கவல்ல தொகுதிக்குண்டுகளை (Cluster Bombs) - பிரிட்டிஷ் படைகள் ஈராக்கில் பயன்படுத்துவதாகத் தெரியவந்திருக்கிறது.

இதனை பிரிட்டிஷ் படையதிகாரி ஒருவர் ஒத்துக்கொண்டிருப்பதோடு - பாலைவனங்களில் பெருந்தொகையாகப் போரிடும் ஈராக்கியப் படையினரைக் கொல்லவே தாம் இதனைப் பயன்படுத்துவதாகக் கூறியிருக்கிறார்.

இந்த அதிர்ச்சித் தகவலை மனித உரிமை நிறுவனங்கள் பலவும் கவனத்திலெடுத்து, தமது கடுமையான ஆட்சேபனைகளை வெளியிட்டுள்ளன.

ஈராக்கில் சதாம் ஹுசைன் - இரசாயன, உயிரியல், அணுவாயுதங்களைப் பதுக்கி வைத்திருப்பதாகவும் - அவற்றை அழிக்காவிட்டால் மனிதகுலமே பாதிக்கப்படுமென்றும் கூறிப்போரை ஆரம்பித்த அமெரிக்காவும் பிரிட்டனும் -

இன்று - சர்வதேசமும் நிராகரித்த போர் வழிமுறைகளைப் பயன்படுத்தவும், மக்களைக் குறிவைத்துத் தாக்கவும் செய்து கொண்டு - அவற்றை நியாயப்படுத்தவும் முயற்சிப்பது வேடிக்கையானதாகும்.

ஏற்கனவே - ஐ.நாவின் அனுமதியின்றியே, அதனை அலட்சியப்படுத்திப் போரை ஆரம்பித்த அமெரிக்கா - தனது படையினர் போர்க்கைதிகளானாலும் - ஈராக்கை ஐ.நா.சாசனத்தின்படி நடக்க வேண்டுமென வலியுறுத்தி வேடிக்கை காட்டிய பின்னர் -

இப்போது மனித அவலமொன்றுக்கு - மனிதாபிமானத்தையும், சர்வதேச விதிமுறைகளையும் தனக்கேற்றாற்போல திரிபுபடுத்தி - தனது அழிவுதரும் போருக்கு நியாயம் தேட முனையும் மற்றுமொரு நாடகத்தை அரங்கேற்றவே முயல்கின்றது.

# வறுமையால் இராணுவத்தில் சேர்ந்த இளைஞர்கள் சவப்பெட்டிகளில் திரும்பினர்

## பிரதமர் ரணில் மாத்தறையில் உரை



(கொழும்பு)

ஈராக் மீதான யுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் குழுக்கள- ஏன் இலங்கையில் யுத்தம் நடந்தபோது அதை நிறுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பினார்.

மாத்தறையில் நடந்த கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

ஈராக் மீதான யுத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள்- இங்கு நடந்த யுத்தத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்காததால் இது போலியானதாகவே இருக்கவேண்டும்.

வெல்லமுடியாத யுத்தத்துக்கு நமது இளைஞர்களைப் பலிகொடுக்க நான் விரும்பவில்லை. அவர்களுக்கும் பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுக்கவே விரும்புகிறேன்.

முன்னர் மாத்தறை வரும்போதெல்லாம், யுத்தத்தில் மரணமடைந்தோரின் மரணச் செய்திகளைத்தான் கேட்க முடிந்தது. தென்பகுதி இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்துகொண்டது வறுமையால்தான்.

அதனால், அவர்கள் யுத்தத்தில் உயிரிழந்து சவப்பெட்டிகளில் தான் வீடு திரும்பும்நிலை ஏற்பட்டது. இந்தநிலை எல்லாம் இப்போது யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் முற்றாக மாறிவிட்டது.

என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

## ஈராக் மீதான யுத்தத்தால் தங்கத்தின் விலை வீழ்ச்சி

ஈராக் மீதான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கொழும்பில் தங்கத்தின் விலை ஆயிரம் ரூபாவினால் வீழ்ச்சியடைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

விலை குறைந்தாலும், தங்க நகைகளை வாங்குவோரின் தொகையும் வீழ்ச்சியடைந்திருப்பதாகக் கொழும்புத் தனியார் வர்த்தகர்கள் தெரிவித்தார்கள்.

இதேவேளை, தங்கத்தின் விலை வீழ்ச்சியை இலங்கை வங்கியின் தங்க விற்பனைப் பிரிவும் ஊர்ஜிதம் செய்துள்ளது. ஈராக் மீதான யுத்தம் ஆரம்பித்த பின்னர் தங்கத்தின் விலை வீழ்ச்சியடைய ஆரம்பித்ததாகவும், யுத்தத்துக்கு முன்னர் 8799 ரூபாவிற்கு விற்கப்பட்ட தங்க பிஸ்கட்டின் விலை - யுத்தத்தின் பின்னர் 8547 ரூபாவாக வீழ்ச்சியடைந்திருப்பதாகவும், இலங்கை வங்கியின் தங்க விற்பனைப் பிரிவு தெரிவித்தது.

இதேவேளை, கொழும்புத் தனியார் வர்த்தகர்களிடம் யுத்தத்துக்கு முன்னர் ஒரு பவுண் தங்கம் ரூபா 9500 ஆக விற்கப்பட்டதாகவும் இப்போது 8400 ரூபாவாகக் குறைந்திருப்பதாகவும் தெரியவருகிறது.

### அரசியல் விவாத நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டது

## தமக்குத் தொடர்பில்லையென இந்தியத் தூதரகம் அறிவிப்பு!

(கொழும்பு)

தனியார் தொலைக்காட்சியொன்றில் கடந்த ஞாயிறன்று ஒளிபரப்பாகவிருந்த அரசியல் விவாத நிகழ்ச்சி இடைநிறுத்தப்பட்டதற்கும், தமக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லையெனக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் அறிவித்துள்ளது.

இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ரீனத் சந்து இதுபற்றித் தெரிவிக்கும்போது - இந்தியத் தூதரக அதிகாரிகள் குறிப்பிட்ட அரசியல் நிகழ்ச்சியை இடைநிறுத்தியதாக வெளியான தகவல் திரிவுபடுத்தப்பட்ட ஆதாரமற்ற ஓர் தவறான செய்தியெனத் திட்டவட்டமாகக் கூறவிரும்புகின்றேன். எந்தவொரு அரசியற்கட்சிப் பிரமுகவராவது இத்தொலைக்காட்சி ஒளிபரப்பைப் பற்றி இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொள்ளவில்லை. மற்றும் இந்தியத் தூதரகத்திற்கு எந்தவொரு தொலைக்காட்சிச் சேவையிலும் தலையிடும் தேவையில்லை.

இந்தியாவிற்கு ஜனநாயகம் மற்றும் பல்லினவாதம் என்பவற்றின் மீது என்றும், எங்கும் திடமான நம்பிக்கையுண்டு. இந்தியா கடைப்பிடிக்கும் கருத்துக்களுக்கு எதிர்மாறான கருத்துக்களை எவராவது வெளியிட்டால், எங்களுடன் ஒத்துப் போகாதாவர்களின் உரிமையையும்கூட நாம் ஆதரிப்போம். ஆகவே இந்தியா ஒருபோதும் எவரையும் குறுக்கிட்டு - எந்தக் கருத்துக்களையும், அவை எதிராக இருந்தாலும்கூட அவற்றைத் தடைசெய்யவோ, மறைக்கவோ மாட்டாது என அவர் தெரிவித்துள்ளார்.

# விபத்துக்களால் 3 மாதத்தில் அறுவர் பலி; 400 பேர் காயம்

### யாழ்.போதனா வைத்தியசாலைப் புள்ளி விபரங்களிலிருந்து தகவல்

(பண்டத்தரிப்பு)

யாழ்.குடாநாட்டில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் காரணமாகக் கடந்த மூன்று மாதகாலப்பகுதியில் மட்டும் 400 பேர் படுகாயமடைந்ததுடன், 6 பேர் பலியாகியுமுள்ளனர்.

இவ்வாறு யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் பொலிஸ் பிரிவு அலுவலகப் பதிவுகள் தெரிவிக்கின்றன.

விபத்துக்களில் சிக்கியவர்களில், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மட்டும் சிகிச்சைபெற வந்தவர்களின் எண்ணிக்கை இதுவாகும். இதுதவிர, ஏனைய வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்றவர்களின் விபரங்களைச் சேகரித்தால் இதன் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புண்டு.

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளைச் செலுத்துதல் மற்றும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமல் செல்லுதல் போன்றவையே இவ்விபத்துக்களுக்கு பெரும்பாலும் காரணம் எனத் தெரியவருகிறது.

(43)

## கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் ஏப்ரல் 7 வரை அனுஷ்டிப்பு!

(கிளிநொச்சி)

வெண்புறா நிறுவனத்தால் கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. முதலாம் திகதி முதல் எதிர்வரும் 7 ஆம் திகதிவரை இந்த கண்ணிவெடி விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இக்காலப்பகுதியில் கண்ணிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தம் செயற்பாடுகளில் வெண்புறா நிறுவனத்தினர் ஈடுபட்டுள்ளனர். கருத்தரங்குகள், நிகழ்வுகள் என்பனவும் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

## அஞ்சல் அலுவலகம் இன்றி வடமராட்சி கிழக்கில் மக்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் கட்டைக்காட்டிலிருந்து மாமுனை வரையான பகுதிகளில் மீள்குடியேறிவரும் மக்கள் அஞ்சல் அலுவலகமின்றிப் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆழியவளை, முள்ளியான் பகுதிகளிலிருந்த உபதபால் அலுவலகங்கள் இன்னும் திறக்கப்படவில்லை. தாழையடியிலிருந்து 18 கி.மீ. இற்கு அப்பால் அமைந்துள்ள கோயில் போக்கறுப்பு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, ஆழியவளைப் பிரதேச மக்களிற்குத் தபால் விநியோகமும் நடைபெறுவதில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை - மாதாந்த உதவிப் பணம் பெறும் முதியவர்கள் தமக்குரிய நூறு ரூபாவைப்பெற, 50 ரூபாவைச் செலவழித்து வர வேண்டியுள்ளதாக அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

(34)

## புலிகளுடன் இணையச் சென்ற இரு சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணையச் சென்ற இரு சிறுமிகள் - நேற்றுமுன்தினம் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கிளிநொச்சி மக்கள் தொடர்பகப் பணிமனையில் வைத்து இரு சிறுமிகளையும், பெற்றோர்களிடம் விடுதலைப் புலிகள் ஒப்படைத்தனர்.

சங்கானை, திருநெல்வேலி ஆகிய இடங்களைச் சேர்ந்த சிறுமிகளே - வயது குறைந்த காரணத்தால் மீண்டும் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## தொண்டராசிரியர் போராட்டத்தினால் திருமலையில் கல்வி அமைச்சு செயலிழப்பு

வட-கிழக்கு மாகாணத் தொண்டராசிரியர்கள் நேற்றுமுன்தினம் திருகோணமலையில் உள்ள மாகாணக் கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்களம் என்பவற்றுக்கு முன்பாக நடாத்திய மறியற் போராட்டத்தால், மேற்படி செயலகங்கள் இயங்க முடியாதநிலை ஏற்பட்டது.

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி - தொண்டராசிரியர்கள் நடத்திவரும் போராட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கமும் இணைந்துகொண்டது.

450 தொண்டராசிரியர்களும் ஏனையோருமாக சுமார் 800 பேருடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், இராஜகுகனேஸ்வரன், துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் இந்த மறியற் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

# ஆனையிறவு யாரிடம் உள்ளதோ



தளபதி பால்ராஜ்

# யாழ்ப்பாணம் அவருக்குச் சொந்தம்!

**ஆனையிறவு வெற்றிக்கு வித்திட்ட குடாரப்புத் தரையிறக்கம் பற்றி - கேணல் பால்ராஜ், அண்மையில் அத்தரையிறக்க வெற்றிவிழா வடமராட்சி கிழக்கில் நடைபெற்றபோது, ஆற்றிய உரையின் இறுதிப்பகுதி.**

அப்போது சண்டை ஆரம்பமானது. குறுகிய நேரத்தில் 'படகில் போராளிகளை ஏற்றும் இடத்தை எதிரி கண்டுவிட்டான்.

சண்டை நடந்து கொண்டிருந்தது. படகில் நாம் வந்து கொண்டிருக்கிறோம். எமக்குச் சற்றுத் தொலைவில் கடலில் சண்டை நடந்துகொண்டிருந்தது. நாம் தரையிறங்கும் பகுதியையும் எதிரி கண்டுவிட்டான். அதற்கும் அருகாக மூன்று பகுதிகளாகச் சண்டை நடந்துகொண்டிருந்தது.

கடலைப் பார்க்கும்போது தீச்சுவாலைதான் தெரிந்தது. பெரும் அமர்க்களமான .சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கடலில் 3 பிரிவாகச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமது படைப் பிரிவுகள் ஒரு பிரச்சினையும் இன்றித் தரையிறங்குகின்றன. அப்போது கடலில் பார்த்தேன் -ஒரு நாடும் மற்றொரு நாடும் எவ்வாறு சமர்புரி



யுமோ, அதைவிட வேகமாகக் கடற்புலிகள் சண்டை புரிந்தனர். கடற்புலிகள் வலுப்பெற்றிருக்கிறார்கள். தரையிறங்கும் அணிகளுக்குப் பிரச்சினை ஏதுமின்றித் தரையிறக்கப்பட்டது என்பது மிகவும் மகிழ்வாக இருந்தது.

எமது கடற்புலிகளின் துரிதமான செயற்பாடு மற்றும் மதிநுட்பமான செயல்களால்தான் இத்தாவிலையும், குடாரப்புப் பகுதிகளையும் தக்கவைக்க முடிந்ததுடன், ஆனையிறவையும் மீட்க முடிந்தது என நான் கூறுவேன். இதனை நீங்கள் சரியானமுறையில் விளங்க வேண்டும்.

எம்மைத் தரையிறக்கியது மட்டும் அவர்களின் பொறுப்பல்ல, எமக்கான விநியோகப் பணிகளையும் அவர்களே செய்யவேண்டி இருந்தது. மருதங்கேணியை உடைத்துக்கொண்டு வந்து உங்களுக்குச் சப்ளை தரமுடியும் எனச் சூசை கூறினார். அப்படியே அந்தக் கடற்பகுதியில் 27 ஆம் திகதி காலை தரையிறங்க வேண்டியிருந்தது.

பட்டப்பகலில் சந்திரிகாவின் பெரும்படைகள், பாரிய கடற்கலங்கள் மற்றும் கனரக ஆயுதங்கள், பெரும் விமானங்கள் கொண்ட படைகளால் என்னசெய்ய முடிந்தது. அதன்பின் நாம் சண்டையைத் தொடர்ந்தோம். நாங்கள் நகர்ந்து இத்தாவிலை முழுமையாகக் கைப்பற்றினோம். முழுமையாகப் பொக்ஸ் அடிக்கப்பட்டது. இதில் பெரும் இராணுவ முகாம் ஒன்று இருந்தது. அதை எமது படையணிகள் தாக்கி, இராணுவத்தையும் கொன்று, ஆயுதங்களையும் மீட்டன. உதவிக்கு நாகர்கோவிலிலிருந்து வந்த படைகளையும் கொன்று ஆயுதத்தையும் கைப்பற்றின. அதனுடன் உதவிப்படைகள் நின்று விட்டன. கண்டி வீதிதான் பிரச்சினையாக இருந்தது. பளைப்பகுதி, எழுதுமட்டுவாள் பகுதி, கிளாலிப் பகுதிகளுக்காகத் தளபதி கேணல் துர்க்கா அவர்களை மகளிர்படை நியமித்தது. சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவு ஆனையிறவுப் பகுதியை நோக்கிப் பளைப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தது.

மாலதி படையணியை, கண்டல் பகுதியை நோக்கி நிறுத்தியிருந்தோம். சிறுத்தைப் படையணியின் சில பகுதியினர் வந்தனர். அவர்களையும் கண்டல் பகுதியில் நிறுத்தி, நாம் பொக்ஸ்சை முழுமையாக இறுக்கினோம். அப்போது இம்ரான் பாண்டியன் படையணி, விசேட படையணி, சினைப்பர் அணி, ஆர்.பி.ஜி. அணிகள் எங்கு தாக்குதல் என்றாலும் சமராடக்கூடியதாக நிறுத்தப்பட்டிருந்தன. குறிப்பாகச் சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தச் சண்டையில் 60 வீதமான மகளிர் படையணியினரும், 40 வீதம் ஆண்கள் படையணியினரும் பங்குபற்றினர். பளைப்பகுதியில் 53 ஆவது டிவிஷன் நிலை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இத்தகைய விசேட படையணியுடன்தான் நாம் மோதலுக்குத் தயாரானோம்.

தாக்குதல் ஆரம்பமானது. தலைவரது மதிநுட்பமான, மிகவும் முக்கியத்துவமான கரும்புலி அணியால் - நாம் தரையிறங்கிப் பார்க்கும்போது, பளைக்குச் சற்று அண்மையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆட்லறிகளும் தீச்சுவாலையாக அழிக்கப்படுகின்றன. எமது கரும்புலி அணி துல்லியமாக இலக்குகளை அழித்தது. அதன்பின், மோட்டார் அணி செயலிழந்து சிறிது நேரம் அமைதியாய் இருந்தது.

## குடாரப்புத் தரையிறக்கம் பற்றி களமுனைத் தளபதியின் அனுபவம்!

அந்தநேரம் கண்டி வீதியைக் கைப்பற்ற எதிரி தொடர்ந்து பல தாக்குதல்களை மேற்கொண்டான். இந்தத் தாக்குதலில் வாழ்வா, சாவா என்ற பிரச்சினை. பிரபாகரனின் படையா, சந்திரிகாவின் படையா என்ற கௌரவப் பிரச்சினையாக மாறிவிட்டது. அவர்களும் முழுமூச்சாகச் செயற்பட்டனர்.

ஆனையிறவு யாரிடம் உள்ளதோ, அவர்களுக்கு யாழ்ப்பாணம் சொந்தம் என்பது இராணுவரீதியாக உண்மை. அதனால், இராணுவத்தினர் மிகவும் மோசமாகத் தாக்கினார்கள்.

சந்திரிகா- பலாலிக்கு அனைத்து இராணுவத் தளபதிகளையும் அனுப்பிவிட்டு, அவர்களுடன் 24 மணிநேரமும் தொடர்புடன் இருந்தார். பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும் பலாலியில் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தார். அவருக்குக் களநிலை தெளிவாகத் தெரியாது.

53 ஆவது படைப்பிரிவு எம்முடன் கடும் சண்டையில் ஈடுபட்டுச் சடலமாகவும், காயமடைந்தும் பலாலிக்குப்போய்க் கொண்டிருந்தது. நாம் பிடிப்பது, திரும்பவும் அவன் பிடிப்பது அது மாறிமாறி நிகழ்ந்து கொண்டிருந்தது. பெரும் ரணகளமாக மாறியது. இத்தாவில் பகுதியில் எமது போராளிகள் மிகவும் துணிவாகக் களமாடியதை என்னால் இப்பொழுது நினைத்தாலும் வித்தியாசமான உணர்வு தோன்றுகின்றது. மகளிர் படையணி தமது பகுதியில், தாமே தனித்து நின்று சண்டையிட்டனர். இராணுவ கொமாண்டோக்கள் தினமும் 30, 40, 50 என மடிந்து கொண்டிருந்தனர்.

இப்போதும் இத்தாவில் பகுதிக்கு நீங்கள் போய்ப்பார்க்கலாம் எத்தனை எலும்புக்கூடுகள் இருக்கின்றன என்று. இந்த வகையில் 34 நாட்கள் யுத்தம் நடந்தது. நாம் முற்றுகையிட்ட பகுதியில் மக்களும் சிக்கியிருந்தார்கள்.

உடனடியாகத் தளபதி சூசை அவர்கள் கடலுக்குள்ளால் அவர்களை வன்னிக்கு அனுப்புவதாகக் கூறினார். நாம் அவர்களை ஆபத்தின்றி அனுப்பினோம். பக்குவமாக வன்னியில் தங்கவைக்கப்பட்டனர். இல்லாவிட்டால் அனைத்து மக்களும் கொல்லப்பட்டிருப்பார்கள்.

நாம் மக்களை அனுப்பிய பின்னர்தான், எதிரி மீது தாக்குதல் நடாத்தினோம். 53 ஆவது டிவிஷன் இராணுவமும், அதன் பொறுப்பதிகாரியும் தம்மால் முடியாது எனக் கூறிவிட்டனர். நிச்சயமாக சமரை வெல்லமுடியாது எனக் காமினி ஹெட்டியாராச்சி கூறிவிட்டார். உடனடியாக அவர் மாற்றப்பட்டார். அதன்பின், இந்த முற்றுகையை அழிப்பதற்குப் பல இராணுவ உயர் தளபதிகள் வந்து மோதினார்கள். உங்களிடம் கூறவிரும்புகிறேன்- ஒருநாள் எங்களை முற்றாக முற்றுகையிட்டு விட்டார்கள். சந்திரிகாவிற்கு அறிவிக்கப்பட்டது. தாம் பால்ராஜை உயிருடன் பிடிப்பதா? அல்லது அவரை அழிப்பதா? என்று. சந்திரிகா முடிந்தால் பிடியுங்கள் அல்லது சடலமாக எடுங்கள் எனக் கூறினாராம்.

சரியாக 12 மணித்தியாலத்திற்குள் ஒரு பழுதும் இல்லாமல் 2 பவள், 2 டாங்கி, ஒரு சலாடின் துருப்புக்காவி என்பவற்றை நாம் மீட்டு, அதனால் எதிரி மீது திருப்பித் தாக்கினோம். எமது போராளிகளால், அதுமட்டுமன்றி 120 இற்கு மேற்பட்ட ராணுவ உடல்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

மற்றும், இத்தாவில் பகுதியில் அன்று நடந்த யுத்தம் மிகவும் வித்தியாசமான ஒரு யுத்தம். எமது பெண் போராளிகள் கைகலப்பில் கூட இராணுவத்தினருடன் ஈடுபட்டனர். அவ்வளவு அருகில் சண்டை நடந்தது. இறுதியில் மகளிர் படையணி இராணுவ பவள் ஒன்றைக் கைப்பற்றி, அதனைக் கொண்டே எதிரிமீது தாக்கினார்கள். இதன் பின் மீண்டும் எமது முழுமையான கட்டுப்பாட்டில் அந்த



முற்றுகை வந்தது. இறுதியாக அந்த வீதியைக் கைப்பற்ற இராணுவம் பெரும் முயற்சியில் இறங்கியது.

பலத்த தாக்குதல்கள் மத்தியில் எமது பகுதியைத் தக்கவைத்தோம். அதன்பின், தளபதி கேணல் தீபனதும், கருணா அம்மானின் அணிகளும் இணைந்து இயக்கச்சிப் பகுதியை நோக்கி மிகவும் வேகமாகத் தாக்கி முன்னேறினார்கள்.

கிளாலியை நோக்கி ஒரு படைப் பிரிவு தாக்குதலை ஆரம்பித்தது. குறிப்பிட்ட நேரத்தில் இயக்கச்சி வீழ்ந்துவிட்டது. அதன்பின், ஆனையிறவு முக்கிய தளத்தைக் கைப்பற்றினார்கள். அதன்பின்- பெரிய உப்பளம், சிறிய உப்பளம், குறிஞ்சாத்தீவு என்ற தண்ணியில்லாத உப்புப் பகுதிக்குள் இராணுவம் போய்த் தேங்கியது.

தண்ணீர் இல்லாமல் பலர் அழிந்தார்கள். பின்னர் அதனுள் வைத்துத் தாக்கியதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கடலால் தப்பியோட முற்பட்ட படைகளை- கடற்புலிகள் வந்து வழிமறித்துத் தாக்கி அழித்தார்கள்.

தரைப்பகுதியால் ஓடிய இராணுவத்தைக் கொன்று, ஏராளமான ஆயுதத்தை மீட்டனர். அத்தனை இராணுவத் தளபதிகளாலும், சந்திரிகாவாலும், ரத்வத்தவாலும், இந்தச் சண்டையை வெற்றிகொள்ள முடியவில்லை. ஆனையிறவைக் காப்பாற்ற முடியவில்லை.

இதற்குப் பின்னர்தான் நிச்சயமாக இராணுவரீதியாக விடுதலைப் புலிகளை ஒன்றும் செய்ய முடியாது என்ற உண்மையை இராணுவம் விளங்கிக்கொண்டது. தளபதிகளும் புரிந்துகொண்டனர். இப்படியிருந்தும் ஒரு நப்பாசை கொண்டு தீச்சுவாலை நடவடிக்கையைத் தமது முழுப்பலத்தையும் வைத்து இறுதியாகச் செய்து, பெரும் இழப்புக்களுடன் தப்பியோடினார்கள்.

எனவே, இத்தகைய வெற்றிகளுக்கு உறுதுணையாக நின்றவர்கள் எமது மக்கள். எமது மக்கள் அன்றுபோல் இன்றும், இனிவரும் காலங்களிலும் செயற்படவேண்டும். ❋

---

# தொழிற்பயிற்சி திட்டக்கருக்கள் சிறான் கூட்டத்தில் ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கு தொழில்வாய்ப்பு மற்றும் தொழிலாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக மூன்று எண்ணத் திட்டக்கருக்கள் சிறான் செயலகத்தில் நடந்த கூட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

செவ்வாய்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற இந்த கூட்டத்திலேயே இந்த எண்ணத் திட்டக்கருக்கள் முன்வைக்கப்பட்டன. சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த ஆய்வுப்பட்டறையில், சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் வொண்டலன்ட், "இலங்கைக்கான சர்வதேச தொழிலாளர் நிறுவனப் பணிப்பாளர், சிறான் உபகுழுவின் உறுப்பினர் கலாநிதி மகேஸ்வரன் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் 14 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைப்பட்ட மட்டக்களப்பு,அம்பாறை, திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிறுமிகள் மற்றும் இளம்பெண்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான வேலைத்திட்டம், பயிற்சி வழங்கல் குறித்து ஆராயப்பட்டது.

அத்துடன், கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பாகவும், அவர்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மூன்றாவதாக கிளிநொச்சி, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுக்கும் மீள்குடியேற்றத் திட்டத்துடன், வேலைவாய்ப்பு, கடனுதவி ஆகியவற்றை உள்ளடக்கியதாக மூன்று திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதென்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு திட்டத்துக்கு நிதி ஒதுக்கீடு ஏற்கனவே செய்யப்பட்டிருப்பதாகச் சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் தெரிவித்தார்.

# ஆசிரிய நூலகர்களுக்கான பயிற்சி யாழ்ப்பாணத்தில்!

யாழ்.மாவட்டத்தில் ஆசிரியர் நூலகங்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக மாகாண நூலக இணைப்பாளர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக வடமராட்சி, தென்மராட்சி வலயங்களில் நூலக அபிவிருத்திக்குத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளிலிருந்து அதிபர்களால் சிபார்சு செய்து அனுப்பப்பட்ட ஆசிரியர்களுக்கான ஐந்து நாள் பயிற்சி, எதிர்வரும் 19 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இச்செயலமர்வில் பங்குபற்றுவோருக்கான தங்குமிடம், உணவு, கொடுப்பனவு என்பன வழங்கப்படும்.

இதுவரை ஆசிரிய நூலகர் பதவிகளுக்கு விண்ணப்பிக்காத பாடசாலை அதிபர்கள் உடனடியாக வலயக் கல்விப் பணிமனையூடாக மாகாணக் கல்வியமைச்சுக்கு அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

### கலாசார மண்டப திறப்பு விழா

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தான கலாசார மண்டபத் திறப்புவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறும் என ஆலய பரிபாலன திருப்பணிச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

# ஈராக் போர்க்களம்



ஈராக்கின் நதிகளில் பிரிட்டிஷ் ஹோவர் கிராப்ட் படகுகளின் கண் காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது.



அதி நவீன பிரிட்டிஷ் ஹோவர்கிராப்ட் தரையை அண்மிக்கிறது.



பதுங்கு குழியிலிருந்து தாக்குதல் நடத்தப் பயன்பட்ட ஈராக்கிய டாங்கி



பிரிட்டிஷ் படையினர் உபயோகித்த - எத்தரையமைப்பிலும் பயணம் செய்யக்கூடிய வாகனம் ஒன்றைக் கைப்பற்றிய ஈராக்கியர் அதனை ஓட்டிப் பழகுகின்றனர்.



தென் ஈராக்கில் வீதிச் சோதனையில் ஒரு பதிவு

# அதி நவீன விமானம், ஹெலிகொப்ரரை அமெரிக்க வான்படை இழந்தது

## தென் ஈராக்கில் இரண்டும் சுட்டு வீழ்த்தப்பட்டன

தென் ஈராக்கில் - அமெரிக்க விமானப் படையின் அதி நவீன ரகத்தைச் சேர்ந்த இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன.

கர்பாலாவுக்கு அருகே பிளாக் ஹோவ் ஹெலி கொப்ரரொன்று சிறிய ரக ஆயுதமொன்றாலும், எவ்.ஏ-18 ஹொர்கனற் யுத்த விமான மொன்று, தரையிலிருந்து வானோக்கிப் பாயும் ஏவுகணையாலும் தாக்கப்பட்டன.



இத்தாக்குதல்களில் - விமானங்கள் இரண்டிலுமிருந்த விமானிகளும், படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.



முதலில் கிடைத்த தகவல்களின்படி, சுட்டு வீழ்த்தப்பட்ட ஹெலிகொப்ரரில் பதினொரு படையினர் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - பக்தாத்தை நோக்கி முன்னேறுவதற்கு தீவிர முயற்சிகளை மேற்கொண்டுவரும் அமெரிக்கப் படையினரை எதிர்ப்பதற்காக - ஈராக்கின் குடியரசு இராணுவ அணிகள் நேற்றுக்காலை தமது நிலைகளிலிருந்து முன்னேறி வந்து தாக்குதல்களில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## செய்தியாளர் வெளியேற்றம்

ஈராக் தலைநகர் பக்தாத்தில் பணியாற்றிவந்த அல்-ஜெஸீரா தொலைக் காட்சிச் சேவையின் இரண்டு செய்தியாளர்கள் - ஈராக்கிய அரசாங்கத்தின் எதிர்ப்பையடுத்து, அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். இதனைக் கண்டிக்கும் முகமாக - ஈராக் பற்றிய தனது செய்திகளை அல்-ஜெஸீரா இடை நிறுத்தியது.

ஈராக்கின் இந்த நடவடிக்கைக்கு காரணங்கள் தெரிவிக்கப்படவில்லையென்றும் - இது நியாயமற்ற செயலெனவும் - அல்-ஜெஸீரா தொலைக் காட்சியின் பிரதம செய்தி ஆசிரியர் இப்ராஹிம் ஹீலால் தெரிவித்தார்.

கட்டாரிலிருந்து ஒளிபரப்பப்படும் அல்-ஜெஸீரா - அரபு உலகத்தின் மிகவும் சக்திவாய்ந்த தொலைக் காட்சிச் சேவை என்பதோடு - அதனை, 35 மில்லியன் மக்கள் பார்வையிடுவதும் குறிப்பிடத்தக்கது.

உலகவலம்

## வீழ்ந்த பிளாக் ஹோவ் - சில தகவல்கள்




அமெரிக்காவின் மிக முக்கியமான தாக்குதல் ஹெலியான **Black Hawk** மிகத் துரிதமாகச் செயற்படக்கூடியது.

யுத்தகளத்தில் - காயமடையும் படையினரை உடனுக்குடன் அகற்றுவதற்கு ஏற்ற விதத்திலேயே இது முதலில் உருவாக்கப்பட்டது. ஆனாலும்-பின்னர் தாக்குதல்களுக்கும் அது பயன்படுத்தப்படுகின்றது.

இந்த ஹெலியில் 12 படையினரும் நான்கு விமானிகளுமாக பதினாறு பேர் பயணிக்க முடியும்.

தொடர்ச்சியாக 1000 கடல்மைல் தொலைவுக்கு இது பறந்து செல்லக் கூடியது. வானில் வைத்தே, இதற்கு எரிபொருள் நிரப்பக்கூடிய வசதியும் உண்டு.

இந்த ஹெலியில் - டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளும் இருக்கின்றன என்பது விசேட செய்தி. இதன் உச்ச வேகம் மணிக்கு 224 கிலோமீற்றர்கள்.

# தடை செய்யப்பட்ட கிளஸ்ரர் குண்டுகள் பிரிட்டிஷ் படைகள் பயன்படுத்துகின்றன

போர்க்களங்களில் பயன்படுத்தத் தடைவிதிக்கப்பட்டிருக்கும் 'தொகுதிக் குண்டுகளை' **(Cluster Bombs)** பிரிட்டிஷ் படையினர், பஸ்ராவில் தாக்குதல் நடாத்தப் பயன்படுத்தி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஈராக்கியப் படையினர் பெரு மெடுப்பில் காணப்படும் பாலைவனப் பகுதிகள் மீது இத்தகைய குண்டுகள் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படுவதைப் பிரிட்டிஷ் படையதிகாரி ஒருவர் ஒத்துக்கொண்டுள்ளார்.

மக்கள் கூடும் சில இடங்களிலும் இத்தகைய குண்டுகள் போடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் தமது கடுமையான ஆட்சேபத்தை வெளியிட்டுள்ளன.

இதேவேளை, தடைசெய்யப்பட்ட கண்ணிவெடிகளும், மிதிவெடிகளும் அமெரிக்க - பிரிட்டிஷ் படையினரால் சில இடங்களில்





விதைக்கப்பட்டதாக - நியூயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமை அமைப்பான **Human Rights Watch** இன் பேச்சாளர் ஒருவர் பகிரங்கமாகச் சாடியுள்ளார்.

# பி.பி.ஸி. ஒளிப்பதிவாளர் கண்ணிவெடியில் பலி!

(லண்டன்)

வட ஈராக்கியப் பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்த பி.பி.ஸியின் ஒளிப்பதிவாளர் காவே கொலஸ்ரன் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றில் பலியானார்.

இவருடன் கூடச்சென்ற நிகழ்ச்சித் தயாரிப்பாளர் ஸ்ருவர்ட் றீயூக்ஸ் பலத்த காயமடைந்தார்.

கிவ்ரி என்னும் நகருக்கு அண்மையாக, இவர்கள் சென்று கொண்டிருந்த கார், நிலக்கண்ணி வெடியில் சிக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பி.பி.ஸியின் தெஹ்ரான் செய்திப் பிரிவில் பணியாற்றி வந்த கொலஸ்ரன், துணிச்சல் மிக்க சேவைக்காக - புலிட்ஸர் பரிசைப் பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சுயாதீனமான பத்திரிகையாளரான இவர் - கடந்த பல வருடங்களாக-பி.பி.ஸிக்கு ஒளிப்பதிவாளராக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வந்தார்.

இந்தச் சம்பவத்திற்கு முன்பாக-'ஐ.ரி.என்' தொலைக் காட்சிச் சேவையின் செய்தியாளரான ரெரி லொயிட் மற்றும் 'சனல் - 4' செய்தியாளர் காபி ரடோ, அவுஸ்திரேலிய ஒளிப்பதிவாளர் போல் மோரன் ஆகியோர் - ஈராக் மீதான தாக்குதல் தொடங்கிய பின்னர், பலியான சர்வதேச ஊடகவியலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



காவே கொலஸ்ரன்

## போர் ஆதரவு லண்டனில் குறைகிறது



ஈராக் மீது நடாத்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்கான ஆதரவு, லண்டனில் கணிசமான அளவு குறைந்திருப்பதாக கருத்துக் கணிப்பொன்று தெரிவித்தது.

லண்டனிலிருந்து வெளியாகும் டெய்லிமிரர் பத்திரிகை நடாத்திய இக் கருத்துக் கணிப்பில், 48 சதவீதமானோர் போரை ஆதரிக்க 38 சதவீதமானோர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழ்.நகரின் திட்டமிட்ட அபிவிருத்தி செயலகத்தில் விரிவாக ஆராய்வு!

## கொழும்பிலிருந்தும் அதிகாரிகள் வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரத்தினை திட்டமிட்ட முறையில் எவ்விதம் புனரமைப்புச் செய்யலாம் என்பது பற்றி ஆராயும்பொருட்டு, நேற்று நகர அபிவிருத்தி அதிகார சபையினரால் யாழ். அரச செயலகத்தில் விசேட கலந்துரையாடல ஒன்று நடத்தப்பட்டது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் - கொழும்பிலிருந்து வருகைதந்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் எஸ். தர்மசிறி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகள் மற்றும் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் பரமநாதன், யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி. கே.சிவஞானம், யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம் மற்றும் திணைக்கள அதிகாரிகள், கல்விமான்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலின்போது- மாறிவரும் காலமாற்றத்துக்கு ஏற்றபடி யாழ். நகரையும் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்ய வேண்டுமெனப் பலர் கருத்துத் தெரிவித்ததுடன், நீர் விநியோகம், வடிகால் அமைப்பு, போக்குவரத்து சாலைகள், மின்சாரம், தொலைபேசிச் சேவைகள், பஸ் நிலையம், சந்தை ஆகியவற்றை எவ்வாறு அபிவிருத்தி செய்யலாம் என ஆராய்ந்ததுடன், புதிதாக கட்டடங்கள் அமைக்கும்போது, அவற்றை அதிகாரிகள் நன்கு திட்டமிட்டு நிர்மாணிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

அத்துடன் - நாவற்குழி, அல்லைப்பிட்டி, காக்கைதீவு, குருநகர், பாசையூர், கொழும்புத்துறை ஆகிய பிரதேசங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளமையால், இவறறை கூடியவரை புனரமைப்பு செய்யவேண்டும் எனவும், இப்பகுதியில் வாழுகின்ற மக்களுக்கு கட்டட வசதிகளையும் தொடர்மாடி குடியிருப்புக்களையும் அமைத்துக் கொடுக்க வேண்டும் எனவும் இக்கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் - யாழ். பஸ் நிலையத்தை வேறு பகுதிக்கு மாற்றுவது தொடர்பாகவும், பழைய பூங்காப்பகுதியில் பல திணைக்களங்களைக் கொண்ட ஓர் பாரிய கட்டடம் அமைப்பது தொடர்பாகவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. எனினும், இறுதியில் இவை நிராகரிக்கப்பட்டன.

நேற்றைய கலந்துரையாடலில் பங்குபற்றிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், யாழ்ப்பாணத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பான திட்டமொன்றைத் தயாரித்து, மீண்டும் அடுத்த மாதமளவில் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர் எனவும், யாழ்ப்பாணத்தில் உள்ள திணைக்கள அதிகாரிகள், அவர்களின் திணைக்களங்கள் மூலம் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பான திட்ட அறிக்கை ஒன்றை தயாரிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# தொண்டராசிரியர் நியமனம் தொடர்ந்து இழுபறியில்!

(திருகோணமலை)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினரும், தமிழர் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், கஜேந்திரகுமார், க.துரைரெட்ணசிங்கம், மாவை சேனாதிராசா, ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும், கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குடன் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டனர். இச்சந்திப்பில் மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சர் சுரனிமல ராஜபக்ஷவும், வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் சம்பந்தமாக இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னதாக பிரதம மந்திரி, கல்வி அமைச்சர், தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், திறைசேரி உயர் அதிகாரிகள், பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கூடி ஆராய்ந்து இறுதி முடிவு எடுக்கப்பட வேண்டும் என அங்கு தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 197 சிங்கள மொழி மூலமான தொண்டர் ஆசிரியர்கள் கடமை புரிகின்றார்கள். அவர்களுக்கும் நியமனம் வழங்கப்படவேண்டிய தேவை எமக்கு உள்ளதாக அமைச்சர் கொடித்துவக்கு தெரிவித்தார். இதற்கு, தூதுக்குழுவினர் கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்தனர். 1000 தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கிய பின்னர் இவர்களுக்கு நியமனம் வழங்குவதில் எமக்கு ஆட்சேபனை இல்லை என அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பட்சத்தில் ஏனைய மாகாணங்களில் இது பற்றிய பிரச்சினைகள் தோன்றலாம் என்ற அச்சம் உள்ளதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் அங்கு தெரிவித்தார்.

## பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் நடைபெறவிருக்கின்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கடமைபுரிவதற்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டம், நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியிலும், நாளை மறுதினம் காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (ரா)

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி!

மின்சாரம் தாக்கியதில் இளைஞன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் - மானிப்பாயைச் சேர்ந்த மரியதாஸ் பிரதீபன் (வயது-18) எனும் இளைஞனே உயிரிழந்தவராவார்.

தமது வீட்டுக்குப் போடப்பட்டுள்ள கொங்கிறீட் உலர்ந்துள்ளதா எனப் பார்ப்பதற்காக அதன்மேல் ஏற முற்பட்டவேளை, அருகில் மின்சாரம் சென்ற வயரில் ஏற்பட்டிருந்த மின்னொழுக்கினால் இவர் தாக்கப்பட்டு மரணமானார்.

# சமாதான ஆதரவை அறிய மக்கள் கருத்துக் கணிப்பு

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் கருத்துக்கணிப்பு நடத்துவது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருகின்றது.

சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கிவரும் சமயப் பெரியார்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட புத்திஜீவிகள் பலரும் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல மக்களின் நேரடி ஒத்துழைப்பைப் பெறுவது உசிதமாகும் என்று கருத்துத் தெரிவித்து வருவதால், இவ்வாறு அரசு கவனம் செலுத்திவருவதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்று கொழும்பில் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் பின்னர் கருத்துக் கணிப்பை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இதுபற்றி இன்னமும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லையென்றும் தெரியவருகிறது.

# மகளிர் விவகார உபகுழு இன்று கிளிநொச்சியில் கூடும்

மகளிர் விவகார உப குழுவின் மாதாந்தக் கூட்டம், இன்று கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இன்றும், நாளையும் இடம்பெறவுள்ள இக்கூட்டத்தில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தலைமையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

அரச தரப்பில் கலந்துகொள்ளவென, கொழும்பிலிருந்து குழுவில் இடம்பெறுவோர் இன்று கிளிநொச்சி வருகை தரவுள்ளனர். இச்சந்திப்பில் முக்கிய முடிவுகள் எட்டப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (லி)

## ஐரிஷ் நோபல்...

நாட்டைச் சேர்ந்த ஜோன் ஹியூம், இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ், அயர்லாந்து தூதுவர் பிலிப் மக்டொனால்ட், மற்றும் ஜேம்ஸ் டீயூரஸ், டிரல் பேடினண்ட்ஸ் ஆகியோரும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் - அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பை நிறைவு செய்த ஜோன் ஹியூம் தலைமையிலான குழுவினர், யுத்தத்தினால் சேதமடைந்த கிளிநொச்சி மத்திய கல்லூரியையும், கிளிநொச்சி வைத்தியசாலையையும், புதிய வைத்தியசாலைக்காக அடிக்கல் நடப்பட்ட இடத்தினையும் பார்வையிட்டனர்.

பின்னர் இக் குழுவினர் பிற்பகல் 2.30 மணியளவில் கொழும்பு திரும்பினர். (லி)

## உடன்பட்ட...

ஏற்கனவே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக நடைமுறைப்படுத்தி, அதன்மூலம் மக்களுக்கு முழு அளவில் நம்பிக்கையூட்டக்கூடிய வகையில் - அதைச் செயற்படுத்துவதன் ஊடாகவே, சமாதான முயற்சிகள் கூடிய பயனளிக்கும். அத்துடன், இச்சமாதான முயற்சிக்கான ஒத்துழைப்புக்களை மக்களிடம் இருந்து பெறவும், இந்தச் சமாதான முயற்சிகளில் சர்வதேச சமூகத்தை இணைத்துக்கொள்ளவும் முடியும் எனவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

தற்போது உயர்பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு வலயம் என்று மக்கள் மீளக்குடியேற முடியாமல் இருக்கின்ற சூழ்நிலை மற்றும் இயல்புநிலை முழுமையாக ஏற்படுத்தப்படாமல் இருப்பதுமானது இன்றைய சமாதான முன்னெடுப்புக்களில் ஓர் நெருக்கடி நிலையைத் தோற்றுவித்துள்ளது என்பதை, எம்மைச் சந்தித்த - சமாதானத்திற்கான நோபல் பரிசினை வென்ற ஜோன் ஹியூம் தலைமையிலான குழுவினருக்கு எடுத்துரைத்தோம் எனவும், அடுத்த கட்ட முன்னேற்றங்களுக்கு - ஏற்கனவே கண்ட உடன்பாடுகளையும், ஏற்கனவே செய்துகொண்ட உடன்படிக்கைகளையும் நடைமுறைப்படுத்துவதுதான் முக்கியமான அம்சமாகும் எனவும் சு.ப தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

## சமாதானம் குறித்த...

ளேன். புலிகளுக்கும் எனக்கும் இடையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது, வட அயர்லாந்தின் சமாதான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டேன்.

அல்லற்பட்டுத் துன்புறும் மக்களுக்கு உறுதியான சமாதானத்தைப் பெற்றுக்கொடுக்க அனைவரும் பாடுபடவேண்டும்.

சமாதான வழிமுறைகளின் மூலம் எப்படிப்பட்ட பகைமை உணர்வுகளையும் முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்பதை, அனைவரும் மிகத்தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். தற்போதைய சமாதான நடைமுறைகளை நோக்கும்போது, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு வரவேற்கக்கூடியதாக உள்ளதுடன், யுத்தநிறுத்த நடைமுறைகளில் முறையான போக்கைக் கடைப்பிடிப்பதை உணரமுடிகிறது என அவர் தெரிவித்தார். (லி)

உங்கள் அபிமானத்திற்குரிய அதே
ரவிவர்மா



முதுசம் IX கலைவட்டம் வழங்கும்
ஏப்பிரல் 5,6,7,8 ஆம் திகதிகளில் 9 - 5 மணிவரை
பல்கலைக்கழக நூலகக்கேட்போர் கூடத்தில்
ஆரம்ப காலப் பதிப்புப் படங்களின் காட்சி
(298)

Yaso motors
163, stanly road jaffna. 0212222544
No 48 blomendha road, Colombo 13 01347846

சங்குசக்கரம் இரும்பகம்
111 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

ராஜா யாழ்ப்பாணம்.
ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா
நடித்த
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 9.30 இற்கும்
(சி-732)

திறைஞ்சனல்ஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜய், ரீமா சென் நடித்த
பகவதி
வெள்ளி, சனி, மட்டும் 8.45 (பு.நே.) இற்கு
HOLLOW MAN
10.04.2003 முதல் Jurassic Park-3
(சி-731)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட
புகுமுக மாணவர்களுக்கான
வரவேற்பு விருந்துபசாரம்
வரவேற்பு விருந்துபசார நிகழ்வானது சனிக்கிழமை 05-04-2003 அன்று (காலை 8.00 மணிக்கு) நடைபெறவுள்ளதென்பதனை அனைவருக்கும் மகிழ்வுடன் அறியத்தருகின்றோம.
ஏற்பாட்டாளர்கள்,
2 ஆம் வருடம்
கலைப்பீடம்.
(299)

ஹாட்லிக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்
பொதுக்கூட்டம்
காலம்:- 18-04-2003
வெள்ளிக்கிழமை.
காலை 10.00மணி
இடம்:- கல்லூரி மண்டபம்
அமைப்பு விதிகளின் கீழான நிகழ்ச்சி நிரல் வழியே கூட்டம் நடைபெறும் உறுப்பினர்கள் தவறாது வருக.
நன்றி
04/04/2003
இணைச்செயலாளர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.